Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

WESTERN UNION® பணப் பரிமாற்றம்
மூலம் உலகின் எப்பாகத்தில் இருந்தும் பணத்தை விரைவாக பெற்றுக்கொள்ள நல்லூரில்...
சந்தியா மல்ரி கோட்யாட்
531, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 19 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.ஆகிர் 15 (03.08.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:305

# சமாதான முயற்சிகளில் நேர்மையீனம்;
# அரசாங்கம் மீது ஐ.தே.க. குற்றச்சாட்டு!

## புலிகளும் நம்பிக்கையிழந்து விட்டார்களாம்

(கொழும்பு)

**சமாதான முயற்சிகளில் நேர்மையீனமாக நடந்துகொள்ள முற்பட்டதால் அரசாங்கம் மீது விடுதலைப் புலிகளுக்கு சந்தேகம் எழுந்துள்ளதாகவும்—**

**இதனால், சமாதான முயற்சிகள் நெருக்கடிக்குள்ளாகி இருப்பதுடன், நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான சூழ்நிலை ஏற்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.**

**கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் பேசும்போதே – ஐக்கிய தேசி யக் கட்சியின் தேசிய அமைப்பாளரான எஸ்.பி.திஸநாயக்க அரசாங்கத்தின் மீது இந்தக் குற்றச்சாட்டைச் சுமத்தினார்.**

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் சமாதான முன்னெடுப்புக்களை உரிய முறையில் முன்னெடுக்காததன் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒரு கருத்தையும், அவரின் அரசாங்கத்தில் உள்ளவர்கள் மாற்றுக் கருத்துக்களையும் வெளியிட்டு வருகின்றனர்.

இதுவே- தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் குறித்த சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது.

கருணா விடயத்தில் அரசாங்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பிஸ்டல் குழுவினரே புளொட் மோகனை கொன்றனர்

### குற்றப் புலனாய்வுத்துறை தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிஸ்டல் குழுவைச் சேர்ந்த இருவரே புளொட் மோகனைக் கொலை செய்ததாக குற்றத்தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

ஓட்டோவில் சென்று இறங்கிய புளொட் மோகன் தனது செலுலர் தொலைபேசியில் கதைத்துக் கொண்டிருந்தபோது கைத்துப்பாக்கியுடன் சென்ற இருவர், இவரின் மீது சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டு, வெள்ளை நிற வான் ஒன்றில் தப்பிச்சென்றதாகச் சம்பவத்தை நேரில் கண்ட சாட்சியங்கள் வாக்குமூலம் அளித்துள்ளதாகவும் குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவதினம் காலை 10 மணிக்கு வீட்டிலிருந்து வாடகை ஓட்டோ ஒன்றில் புறப்பட்ட இவர், பம்பலப்பிட்டி வஜிரா வீதியில் சமிக்ஞை விளக்குகள் உள்ள இடத்தில் ஒருவரை ஏற்றிக்கொண்டு, சிவா என்று அழைக்கப்படும் நபர் ஒருவரிடம் இவரை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவின் ஜனாதிபதி வேட்பாளர் விடுதலைப் புலிகளை ஆதரிப்பாராம்!

### இலங்கைச் சங்கம் கூறுகிறது

(நியூயோர்க்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள ஜோன் கெரி- தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான ஒருவரென அமெரிக்காவிலுள்ள இலங்கைச் சங்கம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவினால் வியட்னாமில் மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பை ஜோன் கெரி கடுமையாக விமர்சித்துள்ளதாகவும், சுட்டிக்காட்டியுள்ள இலங்கைச் சங்கம், இத்தகைய ஒருவர் அமெரிக்க ஜனாதிபதியாக வருவாராக இருந்தால், அவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் நலன்களை முன்னிறுத்தியே செயற்படுவாரெனவும் தெரிவித்துள்ளது.

### மீள்குடியமர்வு குறித்து மௌனம்

## திங்களன்று பிரதேச செயலகம் முன் மறியல் நடத்த உசன் மக்கள் முடிவு!

(தென்மராட்சி)

தென்மராட்சி உசன் உயர்பாதுகாப்பு வலயத்தில் படையினரால் தடை விதிக்கப்பட்ட வீதியைத் திறந்து தம்மை மீளக்குடிமர்த்துவதற்கு அனுமதியளிக்குமாறு கோரி அந்தப் பகுதி மக்கள் எதிர்வரும் திங்கட்கிழமை தென்மராட்சி பிரதேச செயலகம் முன் - மக்கள் மறியற் போராட்டம் நடத்தவுள்ளனர்.

உசன் வீடுகளை விட்டு வெளியேறி அகதிகளாக அலையும் வீட்டு உரிமையாளர் ஒன்றியம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

தென்மராட்சி பிரதேசம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்ததையடுத்து, உசன் பகுதிகளில் உள்ள வீடுகளில் இராணுவத்தினர் முகாம் அமைத்ததுடன், தமது பாதுகாப்புக் கருதி வீதிகளைத் தடைசெய்தனர். இதனால் வெளியேறிய குடும்பங்கள் உறவினர்கள் வீடுகளிலும், முகாம்களிலும் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

இந்நிலையில், தம்மைச் சொந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

### இடைக்கால கவுன்சில் யோசனையை

## அரசாங்கம் முன்வைத்ததான செய்திக்கு விடுதலைப் புலிகள் மறுப்புத் தெரிவிப்பு!

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளினால், முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபை யோசனைக்குப் பதிலாக, இடைக்கால கவுன்சில் யோசனை ஒன்றை அரசாங்கம் முன்வைத்துள்ளதாக வெளிவந்த செய்திகளை தமிழீழ விடுதலைப் புலிகள் முற்றாக மறுத்துள்ளனர்.

இது குறித்து கருத்து வெளியிட்ட விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய வட்டாரங்கள் -

வடக்கு - கிழக்கு இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்தும் விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட யோசனைகளைத் தவிர வேறெந்த யோசனைகளையும் விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் எனத் தெரிவித்தன.

தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபை யோசனைக்குப் பதிலாக இடைக்கால கவுன்சில் யோசனை ஒன்றை சிறிலங்கா அரசாங்கம் தயாரித்து வருவதாக கொழும்பு ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டிருந்தது.

கடந்தவாரம் வன்னி சென்ற நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கீசன் ஊடாக-

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சுப் பொறுப்புகள் பறிப்பு; ஜே.வி.பி – ஜனாதிபதியுடன் சந்திப்பு!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், ஜே.வி.பி பிரதிநிதிகளுக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று மாலை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

ஜே.வி.பியின் அமைச்சுக்குச் சொந்தமான சில விவகாரங்கள்- சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குச் சொந்தமான அமைச்சுக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்டமையால் எழுந்துள்ள சர்ச்சைகள் குறித்து இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பில் ஜே.வி.பியின் சார்பில் பொதுச்செயலாளர் ரில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழீழ விடுதலைப் புலிகள்

## கருணாவை ஒப்படைக்கக் கோரினால் அரசாங்கம் அதற்கு இணங்காதாம்!

(கொழும்பு)

கருணாவைத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமென்று விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்தால், அரசாங்கம் ஒருபோதும் ஏற் றுக்கொள்ள மாட்டாதெனவும், இரு பகுதியினருக்கும் இடையில் யுத்தக் கைதிகளைப் பரிமாற்றுவது தொடர்பாக எவ்வித உடன்படிக்கையும் செய்யவில்லை எனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில் - தேசிய அல்லது

(12 ஆம் பக்கம் பார்க்க)

### வல்வையில் கொல்லப்பட்ட

## 63 பொது மக்களின் நினைவாக தீருவிலில் நினைவுத் தூபி திறப்பு!

(வடமராட்சி)

இந்திய இராணுவத்தினரால் வல்வெட்டித்துறையில் படுகொலை செய்யப்பட்ட 63 பொதுமக்களின் நினைவுத்தூபி நேற்று வல்வெட்டித்துறை தீருவில் சதுக்கத்தில் திறந்து வைக்கப்பட்டதுடன், அஞ்சலிக் கூட்டமும் இடம்பெற்றது.

1989 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 2 ஆம், 3 ஆம், 4 ஆம் திகதி இந்திய ஆக்கிரமிப்புப் படைகளால் ஆண்கள், பெண்கள் உட்பட 63 பேர் படுகொலை செய்யப்பட்டனர். இந்தப் படுகொலையின் 16 ஆவது நினைவு தினமான நேற்று மாலை வல்வெட்

(12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com. reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# தென்மராட்சி கோட்டப் பாடசாலைகளின் தமிழ் மொழித்தின போட்டி முடிவுகள்

(தென்மராட்சி)

தென்மராட்சிக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட தமிழ் மொழித்தினப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு :

### பிரிவு - I
### வாசிப்பு

முதலாம் இடம் - இ.கபிலினி (கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம்).

இரண்டாம் இடம் - ம.ருகன்யா (கைதடி கலைவாணி வித்தி).

மூன்றாம் இடம் - ப.ஜீவிதன் (கைதடி முத்துக்குமாரசாமி ம.வி).

### பிரிவு - II
### வாசிப்பு

முதலாம் இடம் - மா.கோபிதா (மீசாலை விக்னேஸ்வரா ம.வி).

இரண்டாம் இடம் - இ.கன்னிகா (கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை).

மூன்றாம் இடம் - பா.நிரோஷா (சரசாலை ஸ்ரீ கணேசா வித்தி).

### பிரிவு - I
### ஆக்கத்திறன் வெளிப்-பாடு கதைகூறல்

முதலாம் இடம் - ஆ.பானுஷா (சாவகச்சேரி றோ.க.த.க.பாடசாலை).

இரண்டாம் இடம் - த.வைதேகன் (உசன் இராமநாதன் ம.வி).

மூன்றாம் இடம் - க.சிவனுசன் (கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா ம.வி).

### பிரிவு - I
### ஆக்கம் - எழுத்து

முதலாம் இடம் - த.அபினயா (சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை).

இரண்டாம் இடம் - த.நினுஜா (நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை).

மூன்றாம் இடம் - க.துஷ்யந்தினி (கொடிகாமம் அரசினர் வித்தி).

### பிரிவு - II
### கட்டுரை வரைதல், கடிதம் எழுதுதல்

முதலாம் இடம் - செ.சுதர்சன் (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி).

இரண்டாம் இடம் - இ.எழில்பிரகாஸ் (மந்துவில் றோ.க.த.க.பாடசாலை).

மூன்றாம் இடம் - க.கஜனா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி).

### பிரிவு - III
### கட்டுரை வரைதல், கடிதம் எழுதுதல்

முதலாம் இடம் - கோ.கஜேந்தினி (மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தி).

இரண்டாம் இடம் - க.பிருந்துபியா (விடத்தற்பளை கமலாசனி வித்தி).

மூன்றாம் இடம் - ஜெ.சகன்யா (கைதடி முத்துக்குமாரசாமி வித்தி).

### பிரிவு - IV
### கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்

முதலாம் இடம் - ப.ஜனனி (மீசாலை வீரசிங்கம் ம.வி).

இரண்டாம் இடம் - க.மயூரி (மட்டுவில் கமலாசனி வித்தி).

மூன்றாம் இடம் - த.மேனகா (இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தி).

### பிரிவு - V
### தமிழியற் கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்

முதலாம் இடம் - க.சுபேதிகா (மீசாலை வீரசிங்கம் ம.வி).

இரண்டாம் இடம் - இ.நிலாஜினி (கைதடி முத்துக்குமாரசாமி ம.வி).

மூன்றாம் இடம் - ச.சுகிர்தா (உசன் இராமநாதன் ம.வி).

### பிரிவு - IV
### இலக்கணப் போட்டி

முதலாம் இடம் - க.தனேஸ்வரன் (இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தி).

இரண்டாம் இடம் - த.பிரசன்னா (மீசாலை வீரசிங்கம் ம.வி).

மூன்றாம் இடம் - த.சிவறஜீவ் (விடத்தற்பளை கமலாசினி வித்தி).

### பிரிவு - V
### இலக்கணப்போட்டி

முதலாம் இடம் - சி.சுபேந்தினி (மீசாலை வீரசிங்கம் ம.வி).

இரண்டாம் இடம் - தி.நீரஜா (மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி).

மூன்றாம் இடம் - ந.திருவாணி (வரணி ம.வி).

### பிரிவு - V
### திறனாய்வுப் போட்டி

முதலாம் இடம் - க.சோபிகா (வரணி ம.வி).

### பிரிவு - IV
### குறுநாடக ஆக்கம்

முதலாம் இடம் - த.தர்மிலா (கைதடி முத்துக்குமாரசாமி ம.வி).

இரண்டாம் இடம் - ச.சிறீதரன் (கொடிகாமம் திருநாவுக்கரசு).

மூன்றாம் இடம் - ம.சதீஸ் (மந்துவில் றோ.க.த.க.பாடசாலை).

### பிரிவு - V
### குறுநாடக ஆக்கம்

முதலாம் இடம் - ந.பவுத்திரா (கைதடி முத்துக்குமாரசாமி ம.வி).

இரண்டாம் இடம் - க.ஜனனி (சாவகச்சேரி இந்துக்கல்லூரி).

மூன்றாம் இடம் - ம.செந்தூரன் (கொடிகாமம் திருநாவுக்கரசு).

### பிரிவு - IV
### கவிதை ஆக்கம்

முதலாம் இடம் - நா.சுறாணி (மட்டுவில் சரஸ்வதி வித்தி).

இரண்டாம் இடம் - த.மௌலியா (நாவற்குழி ம.வி).

மூன்றாம் இடம் - ப.சர்வசொரூபி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி).(29)

(மிகுதி நாளை தொடரும்).

## குணராஜா நேற்று பதவியேற்றார்

யாழ்.மாநகரசபையின் புதிய ஆணையாளராக கலாநிதி குணராஜா நேற்றுப் பதவியேற்றார்.

இதுவரைகாலமும் ஆணையாளராக கடமையாற்றிய இ.இராமலிங்கம் வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சுக்கு இடமாற்றம் பெற்று சென்றுள்ளதையடுத்து அவரது வெற்றிடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## யாழ்.பிரதேச செயலர் பிரிவில் காணிகொள்வனவில் ஈடுபடுபவர்களை தொடர்பு கொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் போலி ஆவணங்களைப் பயன்படுத்தி காணிகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

காணி கொள்வனவில் ஈடுபடுபவர்கள் அவதானமாக இருக்குமாறு பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் நாவாந்துறை வடக்கு மற்றும் புதிய சோனகத்தெரு கிராம அலுவலர் பிரிவில் உள்ள சூரிய வெளி, பறைச்சேரி, இராசாலிக்குளம் ஆகிய இடங்களில் உள்ள காணிகள் போலி ஆவணங்களைப் பயன்படுத்தி விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

முஸ்லிம் மற்றும் வேறு மக்களுக்கும் உரிமையான இந்த இடங்களில் உள்ள அரச குடியேற்றத் திட்டக் காணிகளும், தனியார் காணிகளுமே தற்போது முறையற்ற வகையில் சிலரால் கொள்முதல் செய்யப்படுகிறது.

இந்த உரிமை மாற்றச் சட்டத்திற்கு முரணாகவும், உரிமையற்றவர்கள் சிலரும் போலி ஆவணங்களைக் காட்டியும், காணிகளை விற்பனை செய்கின்றனர். கொள்முதல் செய்பவர்கள், பிரதேச செயலரையோ அல்லது அந்தப்பகுதி கிராம அலுவலரையோ தொடர்புகொண்டு ஆவணங்களை உறுதிப்படுத்திய பின் கொள்முதல் செய்யுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

## சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட நபருக்கு இரு வருட கடூழிய சிறைத்தண்டனை!
### யாழ்.நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

சைக்கிள் திருடியவருக்கு யாழ். நீதிமன்றில் இரண்டாண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குருநகர் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கே நேற்று யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா இந்தத் தீர்ப்பினை வழங்கினார்.

யாழ்நகரை அண்டிய பகுதிகளில் இரண்டு சைக்கிள்களைத் திருடிய மேற்படி நபர் கடந்த சனிக்கிழமை யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவரை நேற்று யாழ்.நீதிமன்றில் பொலிஸார் ஆஜர்படுத்தியபோது தனது குற்றங்களை அவர் ஏற்றுக்கொண்டதையடுத்து அவருக்கு இரண்டு வருட கடூழியச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (ப)

## தமிழ்த்தினப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வு

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த் மொழித்தின போட்டியின் இறுதிநாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

யாழ்.கல்விவலயக் கல்விப்பணிப்பாளரும், யாழ்வலயத் தமிழ்மொழித்தின ஏற்பாட்டுக்குழுத் தலைவருமான ப.விக்கினேஸ்வரன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

யாழ்கல்விவலயப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் முதல் இடம்பெற்ற ஆறு கலை நிகழ்ச்சிகளும் நேற்றைய நிகழ்வுகளின் போது மேடையேற்றப்பட்டன.

போட்டியின்போது வெற்றியீட்டிய பாடசாலைகள் மற்றும் மாணவர்களுக்கு வெற்றிச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

நிறஞ்சனாஸ் சங்கானை
ஜூனியர் சிவாஜி துஷ்யந்தன், சுபா, பூஜா நடித்த
குச்சி
காட்சி நேரம்:11.00. 2.45. 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே) saving private Ryan
(சி-2723)

நாகம்ஸ் சுன்னாகம்

ரஜினிகாந்த், நக்மா, ரகுவரன், ஜனகராஜ் நடித்த
பாட்ஷா
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.
அர்ஜூன், மீனா, நெப்போலியன், மணிவண்ணன் நடித்த

அன்புச்சகோதரன்
காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30 (பு.நே)
(சி-2725)

ஓம் சக்தி
சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ தீர்க்காதேவி தேவஸ்தானம்
மஹோற்சவ விழா
கொடியேற்றம் காலம் 06.08.2004 வெள்ளி காலை 10.00 மணி
தேர்த்திருவிழா காலம் 14.08.2004 சனி மாலை 10.00 மணி
தீர்த்தத்திருவிழா காலம் 15.08.2004 ஞாயிறு காலை 9.30 மணி
(ஆடி அமாவாசை)
பூங்காவன உற்சவம் காலம் 16.08.2004 திங்கள் மாலை 4.00 மணி
அனைவரும் வருக
அன்னை அருள் பெறுக.
குறிப்பு: வரலக்ஷ்மி விரத பூஜை 27.08.2004 வெள்ளி பிற்பகல் 2.30 இற்கு இடம்பெறும்
இங்ஙனம், தர்மகர்த்தா.
(795)

பணிநிலை வேண்டுகை

யாழ். மாவட்டத்தின் சந்தைகளுக்கான வரி அறவீட்டாளர் பணிநிலைக்கு ஆண்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. எனவே, சந்தைகளில் பணிபுரிய விரும்புவோர் தன் வரலாறு அடங்கிய விளக்கங்களுடன் 2004.08.05 ஆம் நாள் நடைபெறவுள்ள நேர்முகத் தேர்வுக்கு வருகைதருமாறு வேண்டுகிறோம்.

பணிநிலை : வரி அறவீட்டாளர்
தகைமைகள் : 01. தமிழ், கணிதம் உட்பட க.பொ.த. சாதாரண தரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.
02. அகவை 18-35 வரை இருத்தல் வேண்டும்.

நேர்முகத் தேர்வு நடைபெறும்:
நாள் : 2004.08.05
நேரம் : காலை 10.00 மணி
இடம் : 27, ஆடியபாதம் வீதி, கொக்குவில்.

குறிப்பு: நேர்முகத்தேர்வுக்கு ஆவணங்களுடன் வருகை தரல் வேண்டும்
1. கல்விச்சான்று
2. தே.அ.அட்டை
3. பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
4. மேலதிக தகைமைச்சான்றுகள்

ஆளுகை,
சந்தைப்பகுதி,
யாழ்.மாவட்டம்.
(798)

பொதுசன [illegible]
யாழ்ப்பாணம்



# மனோ - மலிக் பேச்சுக்கள் புதனன்று ஆரம்பமாகும்!

(கொழும்பு)

ஜனாதிபதியின் ஆலோசகர் மனோ தித்தவல மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம ஆகியோர் களுக்கிடையிலான பேச்சுக்கள் நாளை அல்லது நாளை மறுதினம் ஆரம்பமாகும் எனக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியும், ஜனாதிபதியின் தரப்பும் இணைந்து செயற்படவேண்டுமென அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்த பேச்சு வார்த்தை ஏற்பாடுகள் மேறகொள்ளப்பட்டுள்ளன.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுமானால் -

அதில் இடைக்கால நிர்வாகம் தொடர்பாகவே முதலில் பேசப்பட வேண்டும் என தமிழீழ விடுதலைப்புலிகள் கோரிவருகின்றனர். இதுவரை அதற்கு உரிய பதிலை அளிக்காது இருந்து வந்த ஜனாதிபதியின் தரப்பு முழுமையான இணக்கத்தை இன்னும் தெரிவிக்கவில்லை.

எனவே சமாதான முனைப்புக்களில் தொடர்ந்தும் முட்டுக்கட்டை நிலைதோன்றியுள்ளது. இந்த முட்டுக்கட்டைநிலை தீர்க்கப்பட்டால் மாத்திரமே தென்னிலங்கையில் அமைதிச் சூழலைத் தக்க வைத்திருக்கமுடியும் என நம்பும் ஐக்கிய தேசியக்கட்சி அது குறித்துப் பேச ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தது. இந்த நிலையிலேயே இதன் முதல் கட்டமாக மனோ - மலிக் பேச்சு வார்த்தை ஆரம்பமாகவுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி சந்திரிகா - எதிர்க்கட்சி தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்காவை விரைவில் சந்தித்துப் பேசுவார் எனவும் தெரிய வருகிறது. (01)

## இரு தமிழ் கைதிகளுக்கு களுத்துறைச் சிறையில் விஷம் கலந்த உணவு!

### சிறை அதிகாரிகளிடம் விசாரணை

(களுத்துறை)

களுத்துறை ஜாவத்தை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள் இருவருக்கு விஷம் கலந்த உணவு வழங்கப்பட்டமை தொடர்பாக- சிறைச்சாலை அதிகாரிகளிடம் விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைக்குள் விஷம் கொண்டு சென்ற சம்பவத்துடன் சிறைச்சாலை அதிகாரி ஒருவரும் தொடர்புபட்டுள்ளதற்கான தகவல் கிடைத்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சிறைச்சாலையிலுள்ள இரண்டு தமிழ் கைதிகளுக்கு மற்றொரு கைதியே விஷம் கொடுத்திருப்பதாக பொலிஸ் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

கடந்த 28 ஆம் திகதி குறித்த இரண்டு கைதிகளுக்கும் வழங்கப்பட்ட உணவில் விஷம் கலக்கப்பட்டிருந்தமை தெரியவந்திருப்பதாக, களுத்துறை வடக்கு பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி உபுல் ஆரியரட்ன தெரிவித்தார்.

கைதிகள் இருவரும் இந்த உணவை உட்கொள்ளாததன் காரணமாக அவர்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

## படுகொலைச் சம்பவங்களையடுத்து கொழும்பு நகரப்பாதுகாப்பு பலப்படுத்த நடவடிக்கை!

### திலக் ரணவிராஜா தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு நகரத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக- பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

இதுவரை இடம்பெற்ற மனிதப் படுகொலைகள் யாவும் ஒரு சிலரை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்டன. இதனால், பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாது. கடந்த காலங்களில் நாடு - யுத்த சூழல் ஒன்றை எதிர்கொள்ளவேண்டி ஏற்பட்டதன் காரணமாக, பொலிஸாரின் நடவடிக்கைகள் திசைதிருப்பப்பட்டன.

இதேவேளை - கொழும்பு பிரதேசத்தில் தற்போது நடைமுறையில் உள்ள பாதுகாப்பு செயற்திட்டத்தை மேலும் பலப்படுத்த தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் செயற்திட்டம் நேற்றுமுன்தினம் முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

விசேடமாக நெடுந்தூரப் பஸ்கள், மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள் என்பன இடையிடையே நிறுத்தப்பட்டு சோதனையிடப்படவுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மதமாற்றத் தடைச்சட்ட மூலத்தை எதிர்த்து புத்தளத்தில் ஆர்ப்பாட்டம்!

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய கட்சியால், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கட்டாய மதமாற்றத் தடைச்சட்டத்துக்கு எதிராக நேற்று முன்தினம் புத்தளத்தில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

புத்தளம் தில்லையடி புனித அன்னை வேளாங்கன்னி மாதா ஆலயத்திற்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிலாபம் கத்தோலிக்க மறை மாவட்டத்தைச் சேர்ந்த 17 கத்தோலிக்கத் தேவாலய இளைஞர்கள் ஒன்றிணைந்து இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

அமைதியான முறையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர், சுலோகங்களைத் தாங்கியபடி ஊர்வலமாகச் சென்றதாகவும் தெரியவருகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோவும் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார். இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் அவர் தெரிவிக்கும் போது -

இனமத பேதமின்றி நாட்டில் சமாதானம் நிலைபெற, நாட்டின் சகல பிரஜைகளும் செயற்பட வேண்டும்

இந்த நாட்டில் பல்வேறு இனங்களுக்கிடையிலான அந்நியோன்ய உறவுகளைச் சிதைக்கும் வகையில் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ள சட்டமூல யோசனையை உரியவர்கள் விலக்கிக் கொள்ள வேண்டும்.

பல சமயத்தவர்கள் இலங்கையில் வாழ்ந்து வருகின்றனர். இருபது வருடங்களாக இரண்டு இனங்களுக்கும் இடையே இடம்பெற்று வந்த யுத்தத்தை மக்கள் எதிர்கொள்ள நேரிட்டது.

இத்தகைய பிரச்சினைகளை எதிர்கொண்ட நாட்டில் கட்டாய மதமாற்றத் தடைச்சட்ட மூலத்தைக் கொண்டு வந்து, அதன் மூலமாக மதங்களுக்கு இடையே மோதல்கள் ஏற்பட்டால் நாட்டை அபிவிருத்தி செய்ய எந்தவொரு அரசாங்கத்தினாலும் முடியாமற் போய்விடும் என்றும் அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார்.

## கனேடிய கம்பனியிடமிருந்து உல்லாசப் பயணத்துறை விருத்திக்கு இரண்டு சீ பிளேன்கள் கொள்வனவு!

எதிர்வரும் குளிர்காலத்தை கருத்திற்கொண்டு உல்லாசப் பயணத்துறையை விருத்தி செய்யும் நோக்கில் சிறிலங்கன் எயர் லைன்ஸ் - இரண்டு சீ பிளேன்களை கனேடிய கம்பனி ஒன்றிடமிருந்து கொள்வனவு செய்யவுள்ளது.

இந்த சீ பிளேன்களை கடனடிப்படையில் கொள்வனவு செய்வதைவிட உடன் காசுகொடுத்து வாங்குவது இலாபமென சிறிலங்கன் எயர்லைன்ஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் இந்த விமானங்களை வாங்குவதற்கு பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும், இரண்டு மூன்று வருடங்களில் பாவித்த ஒரு விமானத்தின் விலை 1.5 மில்லியன் அமெரிக்க டொலர் எனவும் அவர் தெரிவித்தார்.

எட்டு ஆசனங்களைக் கொண்ட சீ பிளேன்கள் ஏற்கனவே கடந்த வருடம் டிசம்பர் மாதம் கண்டி பெந்தோட்ட, காலி, திருகோணமலை, கேகாலை, சிகிரியா, பொலனறுவை, அநுராதபுரம் மற்றும் அம்பாறை, வீரவில போன்ற இடங்களுக்கு பறப்பை மேற்கொண்டு வருகின்றன.

நீரிலும் தரையிலும் தரையிறங்கக்கூடிய இந்த சீ பிளேன்கள் ஏற்கனவே கண்டி கேகாலை பெருந்தோட்ட பகுதிகளிலுள்ள நீர் நிலைகளில் தரையிறங்கியுள்ளன.

இந்த சீ பிளேன்களை கொள்வனவு செய்வதன் மூலம் இலாபங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமா என சிறிலங்கன் எயர் லைன்ஸ் அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது-

உடனடியாக இலாபத்தைப் பெறமுடியாதெனவும், மாலைதீவில் இவ்வாறானதொரு எயார் ரக்ஷி முறை அறிமுகப்படுத்தப்பட்டு இலாபம் பெற ஆறு வருடங்கள் சென்றதாகவும் தெரிவித்த அந்த அதிகாரி, இலங்கை மக்கள் இவ்வாறானதொரு பயணத்திற்கு பழக்கப்படவில்லை. அதனால் இதற்கு கொஞ்சகாலம் தேவைப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் இலங்கையிலுள்ள சீபிளேன்கள் கடந்த ஆறு மாதங்களில் நாளொன்றுக்கு 2,3 முறை பறந்த காரணத்தால் 9 மில் லியன் ரூபா இலாபமாகக் கிடைத்துள்ளது என அவர் தெரிவித்தார்.

### பிக்குவை அசிற் ஊற்றிக்கொன்ற சந்தேக நபரான தேரர் வைத்தியசாலையில் மரணம்!

கடவத்த அல்தெனிய அபினராக விகாராதிபதியை அசிற் ஊற்றிக் கொலை செய்த சம்பவத்தில் சந்தேகத்துக்குரியவரான தேரர் நேற்றுமுன்தினம் காலை காலமானார்.

நேற்றுமுன்தினம் காலை கராபபிட்டிய பொது வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வருகையிலேயே அவர் காலமானார்.

காலஞ்சென்ற சந்தேகத்துக்குரிய தேரரின் பிரேத பரிசோதனை நடைபெறும் என்று கராப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

## அரசுக்கோ, மக்களுக்கோ எதிராக கொழும்பில் தாக்குதல் நடக்கவில்லை

### மனோ கணேசன் தெரிவிப்பு

விடுதலைப் புலிகள் கொழும்பில் நடத்திய தாக்குதல் சம்பவங்கள் அரசையோ பொதுமக்களையோ பாதிக்காத வகையிலேயே இடம் பெற்றுள்ளன என, நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

சமீப காலத்தில் கொழும்பில் இருவேறு கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஈ.பி.டி.பி. செயலாளர் டக்ளஸ் தேவானந்தா, அத்துருகிரிய கொட்டாவவில் கருணா குழுவுக்கு எதிராக நடைபெற்ற சம்பவமும் விடுதலைப் புலிகள் தங்களுக்கு எதிரானவர்களையே கொலை செய்துள்ளனர்.

இவ்வாறான சம்பவங்கள் அரசுக்கும், பொதுமக்களுக்கும் பாதிப்பு ஏற்படும் வகையில் விடுதலைப் புலிகள் கொலைகளை நடத்தவில்லை, அவர்கள் தங்களுக்கு எதிரானவர்களைக் கொலை செய்வதிலேயே ஈடுபட்டனர்.

இவ்வாறான தாக்குதல் சம்பவங்களால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக கூறிக்கொண்டு விடுதிகளில் சோதனை செய்யப்படுகிறது.

பாதுகாப்புப் பிரிவினரின் இந்த நடவடிக்கைகளால், சமாதான நடவடிக்கைகளில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையீனம் ஏற்பட்டிருக்கிறது என மனோகணேசன் மேலும் தெரிவித்தார். (தே)

## அமைச்சுப் பொறுப்பு நீக்க விவகாரம்: சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. இன்று சந்தித்துப் பேச்சு

ஜே.வி.பியைச் சேர்ந்த அநுரகுமார திஸநாயக்க வசமுள்ள விவசாயத்துறை அமைச்சின் சில பொறுப்புக்களை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - ஆற்றுப்படுக்கை மற்றும் ஏனைய அமைச்சு ஒன்றுக்கு மாற்றிதை அடுத்து எழுந்துள்ள நிலைமை குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் இன்று பேச்சுக்கள் நடைபெறவுள்ளன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலர் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான குழுவும், ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச தலைமையிலான குழுவும் இச் சந்திப்பில் பங்கேற்கவுள்ளன.

ஜே.வி.பி. வசமுள்ள விவசாய அமைச்சின் கீழ்வரும் ஆற்று நீர்ப் பங்கீடு உட்பட்ட சில பொறுப்புக்களை, ஜனாதிபதி சந்திரிகா எந்த வித கலந்தாலோசனையும் செய்யாமல், மைத்திரிபால சிறிசேனவின் ஆற்றுப்படுக்கை துறை அமைச்சுக்கு மாற்றியமையை அடுத்து, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அங்கத்தவக் கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் முரண்பாடுகள் தோன்றியுள்ளமையை அடுத்தே இந்தச் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## முஸ்லிம்கள் மத்தியில் தேசிய உணர்வு உருவாகாதிருப்பது கவலை தருகிறது!

### பசீர் சேகுதாவூத் கருத்து

(கொழும்பு)

தமிழர்கள் மத்தியில் உருவாகியிருக்கும் தேசிய உணர்வு, முஸ்லிம்கள் மத்தியில் உருவாகாமல் இருப்பது கவலையளிக்கிறது என, நாடாளுமன்ற உறுப்பினர் பசீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினரான பசீர் சேகுதாவூத் இது குறித்து மேலும் தெரிவிக்கையில் -


தமிழ்மக்கள் இறுதியாக நடைபெற்று முடிந்த தேர்தலில் தமது தேசிய ஒற்றுமையை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

இந்த வளர்ச்சி அவர்களது 40 வருடப் போராட்டத்தினால் உருவானது ஆகும்.

முஸ்லிம்கள் மத்தியில் இத்தகைய தேசிய ஒற்றுமை ஏற்பட இன்னும் சிறிது காலம் எடுக்கலாம். இன்று தமிழ்மக்கள் இராணுவச் சமநிலை கொண்ட பலமான அமைப்பின் கீழ், ஓர் தலைமையின் அடிப்படையில் செயற்பட்டு வருகின்றனர். தமிழர்கள் பெற்றபலம் முஸ்லிம்களால் அடையப்பட இன்னும் சிறிது காலம் ஏற்பட்டாலும், உண்மையான நிலைப்பாட்டை உணர்ந்து முஸ்லிம் காங்கிரசின் கீழ் அணி திரள்வர் என நம்புகிறேன்.

அரசியல் சுயலாபம் மிக்கோரே முஸ்லிம் காங்கிரஸைப் பிளவுபடுத்த முனைந்தனர். இறுதியில் அவர்கள் எமது அமைப்பிலிருந்து பிரிந்து சென்று கட்சி அமைத்துள்ளனர். இது ஒருபோதும் முஸ்லிம்களின் உண்மையை மறைக்காது எனத் தெரிவித்தார்.

# இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் இங்கிலாந்தே வெற்றி பெற்றது!



(லண்டன்)

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் - இங்கிலாந்து அணி 256 ஓட்டங்களால் அபார வெற்றியைப் பெற்றது.

இரண்டாவது டெஸ்ட் போட்டியில முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸில் 7 விக்கெட் இழப்புக்கு 566 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதையடுத்து பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 336 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.



முதல் இனிங்ஸில் 230 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்த இங்கிலாந்து அணி இரண்டாவது இனிங்ஸில் நேற்று முன்தினம் தொடர்ந்து துடுப்பெடுத்தாடியது.

3 விக்கெட் இழப்புக்கு 148 ஓட்டங்கள் என்ற முதல் நாள் ஸ்கோரிலிருந்து - நான்காவது நாள் ஆட்டத்தைத் தொடங்கிய இங்கிலாந்து 100 ஓட்டங்களை மட்டுமே பெறுவதற்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

நான்காவது நாள் ஆட்டத்தில் ட்ரஸ்கொதிக் 107 ஓட்டங்களை - 158 பந்துகளில் 14 பவுண்டரிகள் ஒரு சிக்ஸருடன் பெற்றிருந்தபோது ரன் அவுட் ஆனார்.

அடுத்து 54 ஓட்டங்களைப் பெற்ற தோர்ப் - கைலின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் - பிளின்ரொப் 20, ஜோன்ஸ் 4, கைல்ஸ் 15, ஹோகாட் 6, ஹர்மிஷன் 1 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர்.



அன்டர்சன் 8 ஓட்டங்களுடன ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத்தீவுகள் அணி வீரர் கைல் 34 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும், லோர்ஷன் 94 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

478 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற கடினமாக இலக்குடன் இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த மேற்கிந்தியத்தீவுகள் அணி ஆரம்பத்தில் நிலைத்து நின்று ஆடிய போதும், அடுத்தடுத்து விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது.

கைல் 15 பவுண்டரிகள் ஒரு சிக்ஸருடன் 82 ஓட்டங்களையும், சிமித் 11, சர்வான் 14, லாரா 13, சந்தர்போல் 43, கொலின் மோர் 10, லோர்ஷன் 2 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

பிராவோ, ஜேக்கப், கொலின்ஸ் ஆகியோர் எந்த ஓட்டத்தையும் பெறமால் ஆட்டமிழந்தனர்.

பாங்ஸ் 25 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார்.


478 ஓட்டங்களைப் பெறவேண்டிய மேற்கிந்திய அணி 222 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது.

கைல்ஸ் 5 விக்கெட்டுக்களையும் ஹோகாட் 3 விக்கெட்டுக்களையும், அன்டர்சன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.




# துடுப்பாட்ட வீரர்கள் தமது திறனை வெளிக்காட்டாததாலேயே இந்திய அணி தோல்வியைத் தழுவியது!

## கங்கூலி கூறுகிறார்





ஆசியக்கிண்ண கிரிக்கெட் இறுதியாட்டத்தில் இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர்கள் தமது முழுத்திறமையையும் வெளிக்காட்டவில்லை.

இதனாலேயே இந்திய அணி இறுதிப் போட்டியில் தோல்வியடைய நேரிட்டது என இந்திய அணித் தலைவர் சவ்ரவ் கங்கூலி தெரிவித்தார்.

இந்தத் தோல்வி குறித்து அவர் தெரிவிக்கையில் -

229 இலக்கு என்பது எளிதானது. அதனால் வெற்றிபெற்று விடுவோம் என நினைத்தேன். ஆனால் அது நடக்கவில்லை.

இந்தத் தொடரில் வீரர்கள் அனைவரும் முழுத்திறமையை வெளிப்படுத்தமுடியவில்லை. நீண்ட இடைவெளிக்குப் பிறகு விளையாடுவதால் வீரர்கள் தங்களது திறனைக்காட்ட முடியவில்லை. சரியான முறையில் வீரர்கள் ஜோடிசேர்ந்து ஓட்டங்களைக் குவிக்கவில்லை. இந்தத் தோல்வியால் நாங்கள் தளரமாட்டோம். அடுத்து ஹொலண்டில் நடைபெறும் போட்டியில் சிறப்பாக ஆடுவோம் என்றார்.

இலங்கை அணியின் அணித்தலைவர் அத்தப்பத்து கூறியதாவது -

தொடக்க ஆட்டம் முதலே நாங்கள் சிறப்பாக ஆடினோம். அவுஸ்ரேலிய சுற்றுப் பயணத்துக்குப் பின்பு கடுமையான பயிற்சியில் ஈடுபட்டோம். இந்த வெற்றிக்கு வீரர்களின் கூட்டுமுயற்சியே காரணம் என்றார்.

## தாச்சி இறுதிப் போட்டி!

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் 2004 ஆம் ஆண்டுக்கான மாபெரும் தாச்சிப்போட்டி இன்று பிற்பகல் 5 மணிக்கு சுதுமலை நாவலர் மைதானத்தில் - தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் மோதும் ஆட்டம் நடைபெறவுள்ளது.

## கிரிக்கெட் சுற்றுப் போட்டி!

(மானிப்பாய்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.தென் மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் - நெடுந்தீவுப் பிரதேச சபை அணியும், மானிப்பாய் பிரதேச சபை அணியும் மோதவுள்ளன.

இந்த ஆட்டம் நாளை பிற்பகல் 3.30மணிக்கு மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளதென பிரதேச சபையின் செயலாளர் பி.விக்டர் தெரிவித்தார். (100)

## வலைப்பந்தாட்ட போட்டி மீண்டும் ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தால் நடத்தப்படும் வலைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டி நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். மாவட்டத்திலுள்ள பல்வேறு வலைப்பந்தாட்ட அணிகளும் கலந்துகொண்டு வருகின்றன

இந்தச் சுற்றுப்போட்டிகள் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை நடைபெறுமென, யாழ். மாவட்ட வலைப் பந்தாட்ட பயிற்றுவிப்பாளரும் முன்னாள் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தருமான திருமதி ஜே.ரூபசிங்கம் தெரிவித்தார்.

## உதைபந்தாட்ட போட்டி!

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் லண்டன் பழைய மாணவர் உதைபந்தாட்ட அணி, இன்று பிற்பகல் 4 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி அணியுடன் சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ளது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது.

Z Z

தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்ட பிரிவின் அனுமதியுடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் தேவரையாளி யங்லயனஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அல்வாய் விக்ரமன் விளையாட்டுக் கழகத்தின் 'பி' பிரிவு மோதவுள்ளது.(13)

## வேலணை - சுன்னாகம்

# பிரதேசசபைகளின் அணிகள் மாநகரசபை அணியை வீழ்த்தின!

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபையின் ஏற்பாட்டில்- யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையிலான 15 ஓவர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இந்தப் போட்டியில் - மாநகர சபை 'ஆ' அணியும், வேலணை பிரதேசசபை அணியும் மோதி, போட்டித்தொடரின் இறுதியில் வேலணை பிரதேசசபை அணி வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றுத் துடுப்பெடுத்தாடிய மாநகர சபை அணி 15 ஓவர் முடிவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணியின் சார்பாக ஆரம்பத் துடுப்பாட்டக் காரராகக் களமிறங்கிய எஸ்.சதீஸ்கரன் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களையும், இரத்தினசிங்கம் 13 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் வேலணை பிரதேச சபை அணியின் சார்பாக, கே.சுரேந்திரன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வேலணை பிரதேசசபை அணியினர் ஆட்டம் தொடங்கிய முற்பகுதியில் அடுத்தடுத்து விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தனர். எனினும், கே.பிரசன்னாவும், ஐந்தாவது ஆட்டக்காரராகக் களமிறங்கிய குமரகுருவும் ஓட்டவேகத்தை அதிகரித்து 15 ஓவர்களுக்கு ஒரு பந்து மீதம் இருக்கையில் வேலணை பிரதேச சபை அணியினர் 94 ஓட்டங்களைப்பெற்று வெற்றி இலக்கை அடைந்தனர்.

அந்த அணி சார்பாக ஆரம்பத் துடுப்பாட்டக்காரராகக் களமிறங்கிய பிரசன்னா, ஆட்டமிழக்காமல் 50 ஓட்டங்களையும், குமரகுரு 24 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்து வெற்றிப்பாதையில் தமது அணியினை இட்டுச்சென்றனர்.

பந்துவீச்சில் மாநகரசபை அணியின் சார்பாக க.முகுந்தன் 2 விக்கெட்டுக்களைக் கைபற்றினார்.

இந்த கிரிக்கெட் போட்டிக்கு நடுவர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த விளையாட்டு உத்தியோகத்தர் எம். ஆர்.மோகனதாஸ், பார்த்தீபன் ஆகிய இருவரும் கடமையாற்றினர்.

இதேவேளை - இன்னொரு ஆட்டத்தில் வலி.தெற்கு பிரதேச சபை அணி வெற்றிபெற்றது.

உள்ளூராட்சி வாரத்தையொட்டி நேற்றுமுன்தினம் மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற வலி.தெற்கு சுன்னாகம் பிரதேசசபை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மாநகரசபை அணி, சுன்னாகம் பிரதேச சபை அணியின் பந்துவீச்சுக்கு முகம கொடுக்க முடியாமல் 9 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 36 ஓட்டங்களைப் பெற்றது.

மாநகரசபை அணியின் சார்பாக கு.கோகுலன் துடுப்பாட்டத்தில் 18 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் சுன்னாகம் பிரதேச சபை அணியின் சார்பாக ம.டிலிசன் 3 விக்கெட்டுக்களையும், அகிலன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் பிரதேசசபை அணியினர் 13 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து சுன்னாகம் பிரதேசசபை அணி வெற்றி இலக்கை அடைந்தது. அந்த அணி சார்பாக ஆரம்பத்துடுப்பாட்டக்காரராகக் களமிறங்கிய வை. ரஜீநந்தன் 15 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

இராசரத்தினம், பா.அருள்தாஸ் ஆகியோர் முறையே ஆட்டமிழக்காமல் 8, 3 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் சிவபாதசுந்தரம் 3 விக்கெட்டுக்களையும், கு.கோகுலன் 2 விக்கெட்டுக்களையும் கைபற்றினர். (100)

# ரொரன்ரோ ஓபன் ரெனிஸ் றோஜர் பெடரர் வெற்றி!



கனடாவின் ரொரன்ரோ நகரில் நடைபெற்றுவரும் ரெனிஸ் போட்டிகளில் - உலகின் முதல்நிலை ஆட்டக்காரரான றோஜர் பெடரர் வெற்றி பெற்றார்.

அன்டி ரோடிக்கு எதிரான ஆட்டத்தில். றோஜர் பெடரர் 7-5, 6-3, என்ற அடிப்படையில் வெற்றி பெற்றார்.

முதல் வரிசை வீரரான பெடரர் இந்த வரிசையில் தொடர்ந்து 23 போட்டிகளில் வெற்றிபெற்றிருக்கிறார்.

1999 இல் பீட்ஸ் சாம்ராஜ் 24 தொடர் போட்டிகளில் வெற்றிபெற்று சாதனை நிலைநாட்டிய பின்னர், பெடரரின் சாதனையே அடுத்ததாக உள்ளது.

முதல் செட்டிலே பெடரர் றொடிக்கை வெற்றி கொண்டார். இந்தச் சுற்றுப்போட்டியில் இவர் முதல் சுற்றில் வெற்றிகொண்டது இதுவே முதல் தடவையாகும்.

விம்பிள்டன் போட்டியிலேயே பெடரர் நான்காவது சுற்றுத்தான் வெற்றிபெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மாகாண வலைப்பந்தாட்ட போட்டி யாழ். மாவட்ட அணி சம்பியன்!

வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட அணி சம்பியனானது.

வடககு - கிழக்கு மாகாணத்தின் ஏழு மாவட்டங்களைச் சேர்ந்த அணிகளுடன் மோதிய யாழ் மாவட்ட பெண்கள் அணி, அவற்றில் வெற்றி பெற்று கடந்த 24 ஆம் திகதி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகிய மன்னார் அணியுடன் மோதி சம்பியன் பட்டத்தை வென்றது.

யாழ். மாவட்ட அணியின் பயிற்றுவிப்பாளரான திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கத்துடன் சென்று போட்டியில் கலந்துகொண்ட இந்த அணியானது, இம்முறையுடன் ஏழாவது தடவையாக இந்த வெற்றிக்கிண்ணத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




## ஜேர்மனி செஸ் போட்டியில் ஆனந்த் சம்பியன்!

(பேர்ளின்)



ஜேர்மனியிலுள்ள டார்ட்மென்ட் நகரில் முன்னணி வீரர்கள் பங்குபற்றிய செஸ் போட்டி நடைபெற்றது.

இதன் இறுதிப் போட்டியில், இந்தியாவின் முன்னணி வீரரும் உலகின் 2 ஆம் நிலையிலுள்ளவருமான விஸ்வநாதன் ஆனந்த், ரஷ்ய வீரர் கிராமினிக் ஆகியோர் மோதினர்.

இதில் முதல் சுற்று சமநிலையில் முடிவடைந்தது. இதனால் ராபிட் மூலம் வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்பட்டது.

இதில் 19 ஆவது காய்நகர்த்தலில் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

இதையடுத்து 2 ஆவது சுற்று நடத்தப்பட்டது. 31 ஆவது சுற்றில் ஆனந்த் - கிராமினிக்கை 2.5,1.5 என்ற கணக்கில் தோற்கடித்து சம்பியன் பட்டத்தை வென்றார்.

# வடமராட்சியின் விசேட தேவைகள் குறித்து உரிய அதிகாரிகளிடம் கோரத் தீர்மானம்

## தேசிய எழுச்சிப் பேரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது

இராணுவ நடவடிக்கைகளால் சேதமாக்கப்பட்ட அம்பன் மத்திய மகப்பேற்று மருந்தகம் - நீண்ட நாட்களாக இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வந்தது. அதனை இராணுவத்தினர் மீண்டும் சுகாதாரத் திணைக்களத் திடம் ஒப்படைத்துப் பல நாட்களாகியும், அந்த மருந்தகத்தை அதே இடத்தில் இயக்குவதற்கான புனரமைப்பு வேலைகளோ, முன்னெடுப்புக்களோ எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, இந்த மருந்தகம் நிரந்தரமாகத் தொழிற்பட்டு, அந்தப் பகுதி மக்களுக்குச் சிறந்த சேவையாற்ற நடவடிக்கை எடுக்குமாறு, சுகாதாரத் திணைககளத்திடம் கோருவதற்கான தீர்மான மொன்று - வடமராட்சி கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

இதனைவிட - அம்பன், மணற்காடு, குடத்தனை, நாகர்கோயில் வாழ் மக்கள் நிரந்தர குடும்பநல உத்தியோகத்தர்கள் இல்லாத காரணத்தால் - வீட்டுப் பிரசவம், குழந்தைகளுக்கான தடுப்பூசி ஏற்றல் என்பன உரிய நேரத்தில் பெறமுடியாது கஷ்டப்படுகிறார்கள். இந்தக் குறை நிறைவு செய்யப்படவேண்டும்.

மந்திகை ஆதார வைத்தியசாலை வீதி - இரவு பகலாகக் கனரக வாகனங்களால் பாவிக்கப்பட்டு, குன்றும் குழியுமாக உள்ளது.

இதனால், வைத்தியசாலைக்கு முன்பாக பாரிய விபத்துக்கள் நிகழக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. எனவே, இந்தப் பாதையால் கனரக வாகனங்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட வேண்டும்.

வடமராட்சிப் பகுதி வீதி மின் விளக்குகள் பல இடங்களில் ஒழுங்காகச் செயல்படுவதில்லை. இதனால் இரவுக்கொள்ளையர்களுக்கு இது பெரும் சாதகமாக அமைகிறது. மின்சாரசபை இது விடயத்தில் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

வடமராட்சி நகரசபை, பிரதேச சபைகளுக்குட்பட்ட வீதிகள் பல முதலாம்கட்ட வேலையாகத் திருத்தம் செய்யப்பட்டபோதும், இரண்டாம் கட்ட வேலையாகத் தார் ஊற்றல் போன்ற வேலைகள் செய்யப்படாமை காரணமாக அவை மீண்டும் பழைய நிலைக்குத் தள்ளப்பட்டுச் சேதமடைந்து வருகின்றன.

குறைநத செலவில் செய்யப்படவேண்டிய இரண்டாம்கட்ட வேலைகள் - செய்யப்படாமையால், மீண்டும் பாரிய நிதியை அந்தப் பகுதிகளுக்கு ஒதுக்க வேண்டிய நிலையிருப்பதால், இரண்டாம் கட்ட வேலைகள் நடைபெற உரியவர்கள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கரவெட்டி அத்துளு நன்னீர் விநியோகத் திட்டம், கரவெட்டி கிழக்கின் ஒரு பகுதியினருக்கு இதுவரை உதவியளிக்கவில்லை. இந்தப் பகுதி மக்களில் பலர் வறியகுடும்பங்களைச் சார்ந்தவர்கள். 4500 குடும்பங்கள் மட்டும் பயன்படுத்தக் கூடியதாகவே இந்தத் திட்டம் அமைக்கப்பட்டது. ஆனால், இன்று இந்தப் பகுதியில் 15 ஆயிரம் குடும்பங்களைக் கொண்ட மக்கள் இந்த நீருக்காகக் காத்திருக்கின்றார்கள்.

எனவே, வசதி குறைந்த மக்களின் அவல நிலையைக் கருத்திற் கொண்டு இந்த நன்னீர்த் திட்டம் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

யாழ். மாவட்டச் சுகாதாரத் தொண்டர்களை, வைத்தியசாலைச் சிற்றூழியர்களாக நியமிப்பதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை முடிவுகள் இதுவரை வெளியிடப்படவில்லை. அந்த முடிவுகளை வெளியிட்டு, நியமனங்களை விரைவாக வழங்க வேண்டும் போன்ற தீர்மானங்கள் கடந்த சனிக்கிழமையன்று நடைபெற்ற வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவையின் கூட்டத்தில் எடுக்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரன், சிவநேசன், ரவிராஜ் ஆகியோரும், யாழ். மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, தேசிய எழுச்சிப் பேரவைக் கொள்கை முன்னெடுப்பாளர் இளம்பிறை ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

(13)

## மல்ரி மீடியா புறஜெக்டர் கண்டெடுப்பு

யு.பி. 805555752 ஆம் இலக்கத்தை உடைய சாப் ரக மல்ரி மீடியா புறஜெக்டர் ஒன்று முகமாலைச் சோதனைச்சாவடியில் இராணுவச்சிப்பாய் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டு, முகமாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் தகுந்த ஆதாரத்தைக் காட்டி அதனைப் பெற்றுக் கொள்ளலாம் என பலாலி பாதுகாப்பு நடவடிக்கைச் செயலகத்தினர் அறிவித்துள்ளனர்.

# கட்டாக்காலி நாய்களை அழித்தோர் பரிசு வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 28 கிராம அலுவலர் பிரிவுகள் ரீதியாக கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் நடவடிக்கையில், சிறப்பாகச் செயறபட்ட ஐந்து ஊழியர்கள் - பரிசு வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

பிரதேச சபையின் திட்டமிடல் பிரிவினரால் தெரிவுசெய்யப்பட்டவர்களான கி.பிரான்சிஸ், பி.நடராசா, மா.கிருஸ்ணசாமி, எஸ்.லிங்கேஸ்வரன், மா.ஜெயசூரியகுமார் ஆகியோரே பரிசு பெறவுள்ள ஊழியர்கள் என உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.ரமேஷ் தெரிவித்தார்.

(91)

# நெடுந்தீவில் சிறந்த விவசாயிகளுக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளன!

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தகவல்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேசத்தில் சிறநத விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு உதவி வழங்கவிருப்பதாக, அண்மையில் நெடுந்தீவு செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பட்டினிக்கெதிரான அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நெருக்கடிகளின் மத்தியிலும், வறுமை மேலீட்டினாலும் விவசாயத் துறை மேற்கொண்டு வரும் இந்தப் பிரதேச விவசாயிகளில், சிறந்தவர்களைப் பகுதி பகுதியாக தெரிவு செய்து, அவர்களுக்கு விவசாய உபகரணங்கள் மற்றும் உதவிகளையே இந்த நிறுவனம் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)



அமெரிக்காவிலிருந்து வருகைதந்த விஷன் அமைப்பைச் சேர்ந்தவர்கள் திருநெல்வேலி சிறுவர் இல்லத்தில் தலைமைத்துவப் பயிற்சி வகுப்பு ஒன்றை நடாத்தினர். இதில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ்களை இல்லத் திட்டபணிப்பாளர் வழங்குவதைப் படத்தில் காணலாம். (46)

# உரிய சுற்றுநிருபம் கிடைக்காமையால் ஓய்வூதிய மீளாய்வு பணிகளில் தாமதம்

ஓய்வூதியத் திணைக்களத்தின் 6/2004 ஆம் ஆண்டு சுற்று நிருபத் திற்கமைய, ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்கும் செயற்பாடுகளை மேற்கொள்வதில் பிரதேச செயலக அலுவலர்கள் பெரும் இடர்பாடுகளை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முதற்கட்டமாக சிவில் ஓய்வூதியர்களுக்கு மட்டுமே மீளாய்வு நடவடிக்கை மேறகொள்ளப்படுகின்றது.

விதவைகள், அனாதைகள் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு இந்தக் கணிப்பீடுகள் மேற்கொள்வதற்கான சுற்று நிருபம் கிடைக்கவில்லை.

ஓய்வூதியர்களது சம்பளப் படிநிலைகள், பதவி நிலைகள் தொடர்பான தகவல்களைப் பெறமுடியாத காரணத்தினால் - ஓய்வூதியர்களும், பிரதேச செயலக அதிகாரிகளும் பெரும் சிக்கல்களை எதிர்கொள்ளுகின்றனர்.

புதிய திணைக்களங்களுக்குச் சென்று விபரங்களைப் பெற்று வருமாறு பிரதேச செயலக அலுவலர்களும். அங்கு செனறு பெற முடியாதுள்ளதென ஓய்வூதியர்களும் தெரிவிப்பதால், கருத்து முரண்பாடுகளும் ஏற்படுகின்றன.

கட்டடங்கள் திணைக்களம், விவசாயத் திணைக்களம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுங்கத் திணைக்களம், நீர்வழங் கல் வடிகால் அமைப்புச் சபை, சந்தைப் படுத்தல் திணைக்களம், மாகாண சுகாதார சேவைகள திணைக்களம், புகையிரதத் திணைக்களம், நில அளவைத் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம், மதுவரித் திணைக்களம், கால் நடை உற்பத்தி சுகா தாரத் திணைக்களம் போன்றவற்றிலிருந்து ஓய்வு பெற்றவர்களின் விபரங்களே கிடைப்பதில் தாமதம் ஏற்படுகின்றது.

அத்துடன், சில திணைக் களங்கள் மூடப்பட்ட திணைக்களங்களாக இருப்பதாலும், அவற்றிடமிருந்தும் தகவல்கள் பெறமுடியாது உள்ளது.

ஆகவே, இத்தகைய இடர்பாடுகள் நீக்கப்பட்டால், விரைவாக கணிப்பீடுகளை மேற்கொண்டு, ஓய்வூதியர்களுக்கு நிலுவையுடன் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுககப்படுமென பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(24)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஐந்தாவது அகவையில்



பெயர் : பி.தொம்சன்
முகவரி : தம்பகாமம், பளை.



வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :-----------------------
முகவரி :-----------------------
பிறந்த ஆண்டு:-----------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-----------------------
பெற்றோர் ஒப்பம்




சுற்றாடல் வாரத்தையொட்டி சாவகச்சேரி கிராம அலுவலர் பிரிவில் செருக்கல் பிள்ளையார் ஆலய வீதி கோயிற் சுற்றாடல் சிரமதானம் மேற்கொள்வதைப் படத்தில் காணலாம். (34)

# காணி நிர்வாகத் திணைக்களத்தின் வெளிக்கள அலுவலகர்களுக்கு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண காணி நிர்வாகத் திணைக்களத்தில் பணியாற்றும் வெளிக்கள அலுவலர்களுக்கான மதாந்தக் கூட்டம் - எதிர்வரும் 8 ஆம் திகதி காலை 10 மணிக்கு உட்துறைமுக வீதி, திருகோணமலையிலுள்ள காணி நிர்வாகத் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் வெளிக்கள உத்தியோகத்தர்களையும், குடியேற்ற உத்தியோகத்தர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மாகாண காணி ஆணையாளர் ரவீந்திரன் அழைப்பு விடுத்துள்ளார்.

கூட்டத்துக்கு சமுகமளிக்கும் போது, தத்தமது பகுதிகளுக் குரிய காணித் தேவைகள், அது தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகள் பற்றிய விபரங்கள் மற்றும் வேலை முன்னேற்ற அறிக்கை என்பவற்றைத் தவறாது கொணடு வரும்படி கோரப்பட்டுள்ளனர்.

அத்துடன், இந்தக் கூட்டத்தல் கலந்துகொள்ளும் அலுவலர்களுக்கு போக்குவரத்துப்படி வழங்கப்படும் எனவும், சமுகமளிக்க முடியாத அலுவலர்கள் முன்கூட்டியே அறிவிக்குமாறும் மாகாண ஆணையாளர் அறிவித்துள்ளார்.


(21)



சென். ஜேம்ஸ் மகா வித்தியாலய முத்தமிழ் விழாவில் பிரதம, சிறப்பு கௌரவ விருந்தினர்கள் மற்றும் வித்தியாலய அதிபர் போன்றோர் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் மேடைக்கு அழைத்து வரப்படும் காட்சியைப் படத்தில் காணலாம். (113)





# கருவிலே புற்றுநோய்



கருவில் இருக்கின்ற முட்டையிலேயே சிலவேளைகளில் புற்றுநோய் ஏற்படுகின்றது. இதற்கான காரணத்தைக் கண்டறிய முடியாது தவிக்கின்றனர் விஞ்ஞானிகள். பெண்களுடைய இரத்தத்தை எடுத்து ஆராய்ச்சி செய்து பார்த்த பொழுது, அங்கே புற்றுநோய்களுக்கான அறிகுறிகள் தென்படவில்லை. ஆனால், கருவின் முட்டையில் புற்றுநோய்க்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. தற்போது ஐரோப்பிய நாடுகளிலும் இந்த வகை நோய் பரவியிருக்கின்றது. ஏறக்குறைய 6800 பெண்கள் இந்த நோயினால் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் எனத் தரவுகள் கூறுகின்றன. இதற்குச் செய்யப்பட வேண்டிய சிகிச்சை, அதியுயர்வாக இருக்கும் எனக் கருதப்படுகின்றது. இதேவேளை, 100 வீதம் இந்த நோயைக் கண்டறியமுடியாதென விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். ஆனாலும், அமெரிக்காவில் இந்தப் புற்றுநோய்க்கான குணமாக்கும் ஆராய்ச்சிகள் நடைபெற்றுவந்தாலும், ஐரோப்பாவில் இதனைப் பற்றி எந்த விதமான ஆராய்ச்சிகளோ அல்லது சிகிச்சை முறைகளோ மேற்கொள்ளப்படவில்லை என்ற குறை இருக்கின்றது.

இப்படியேபோனால், பிறப்பிலேயே பிள்ளைகள் புற்றுநோயுடன் பிறக்கக் கூடும் என்ற சிவப்பு எச்சரிக்கையும் விடப்பட்டிருக்கின்றது.

# சனியில் மின்னல்




சனிக்கிரகத்தில் தற்போது மின்னல் தெரிவதாக காசினி செயற்கைக்கோள் கூறியிருக்கின்றது. 1980 ஆம் ஆண்டிலிருந்து சனிக்கிரகம் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகின்றது. ஆனாலும், கடந்த ஒக்டோபர் மாதத்திலிருந்து மிக உன்னிப்பாக சனிக்கிரகம் செயற்கைக் கோள்களால் ஆராயப்பட்டு வருகின்றது. சனிக்கிரகத்தில் காணப்படுகின்ற வளிமண்டல அமைப்பு, ரேடியோ அலைகளைப் கடத்தக்கூடியவாறு இருக்கின்றது. காசினி கடந்த ஜுலை மாதம் 1 ஆம் திகதி சனிக்கிரகத்துக்கருகில் வந்தது. சனிக்கிரகத்தை ஆராய்ச்சி செய்வது அவ்வளவு சுலபமல்ல. ஏனெனில், அவற்றில் காணப்படுகின்ற வளையங்கள் கதிர்த்தொழிற்பாட்டு விளைவைக் காட்டக் கூடியது.

காசினி டைட்டான் கிரகத்துக்கருகில் கடந்த ஒக்டோபர் 26 ஆம் திகதி வந்து ஆராய்ச்சி செய்தது. ஆனால், எந்த விதமான மின்னல் பற்றிய தகவல்களும் கிடைக்கவில்லை. சனிக்கிரக்கத்தில் ஐதரோக்காபன்கள் காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

அதுமட்டுமல்ல, ஐதரோக்காபன்கள் பனிக்கட்டிபோல் காணப்படுகின்றன.

# உள்நாட்டுப் பாதுகாப்பு




அமெரிக்காவின் உள்நாட்டுப் பாதுகாப்புத் திணைக்களம் இப்பொழுது பலதரப்பட்ட சிக்கல்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றது. இதற்குக் காரணம் - சரியான ஒழுங்கமைப்பின்மை மற்றும் தொடர்பாடல் சிக்கல்கள் ஆகியன இந்தத் திணைக்களத்தின் தனித்துவத்தை இழக்க வைத்திருக்கின்றன. உள்ளூரிலே நடைபெறுகின்ற எல்லாவகையான குற்றச் செயல்களையும் கணடறிவதற்காகச் சைபர் வலையமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது. இதன்மூலம், உள்நாட்டில் நடைபெறுகின்ற குற்றச்செயல் நடவடிக்கைகளை ஒடுக்கக் கூடியதாக இருந்தது. ஆனால், இப்போது ஏற்பட்டிருக்கின்ற மிகச் சிக்கலானநிலை, இந்த சைபர் வலையமைப்பைக்கூடக் கேலிக்கூத்தாக்கியிருக்கின்றது. இதன்மூலம் நாட்டின் பொருளாதாரம் மட்டுமல்ல, ஸ்திரத்தன்மையும் பாதிப்புக்குள்ளாகி இருக்கியிருக்கின்றது. இந்த விளைவுகள் காரணமாக அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புத் திணைக்களம் தேசிய சைபர் எச்சரிக்கை அமைப்பை உருவாக்கியிருக்கின்றது: சைபர் பாதுகாப்பு முறைமூலமே இந்தளவு காலமும் அமெரிக்க உள்ளூர்ப் பாதுகாப்பைத் தக்கவைத்துக் கொண்டிருந்தது. ஆனால், சைபர் அட்டாக் காரணமாக அமெரிக்காவின் உள்ளூர்ப் பாதுகாப்பும் கேள்விக்குறியாகியிருக்கின்றது.

# டிஜிற்றல் கருவிகள்

உலகத்தின் தொழில் நுட்பம் முற்றுமுழுதாக டிஜிற்றல் மயமாகிக்கொண்டுவருகின்றது. தொழில்நுட்பவியலாளர் களின் கருத்துப்படி, அடுத்த வருடத்தில் 10 மில்லியன் மக்கள் டிஜிற்றல் தொழில் நுட்பக் கருவிகளுக்கு மாற இருக்கின்றார்கள்.



சொனி நிறுவனத்தால் தற்போது, கண்டுபிடிக்கப்பட்டுள்ள டிஜிற்றல் சிடி வோக்மன்கள் சந்தையில் அதிகம் காணப்படுகின்றன.

1990 ஆம் ஆண்டுக்குப் பின் வந்த டிஜிற்றல் தொழில் நுட்பம் கடந்த தசாப்தத்தில் மட்டும், அதியுன்னத வளர்ச்சியைப் பெற்றிருக்கின்றது.

எம்பி 3 பிளேயர்கள் ஆரம்பத்தில் டிஜிற்றல் தொழில்நுட்பம் இல்லாமலேயே வந்தன. ஆனால், தற்போது எம்பி 3 பாடல்கள் எல்லாம் டிஜிற்றல் ஒலி நயத்துடன்கூடியனவாக உள்ளன.


எத்தனையோ இலத்திரனியல் சாதனங்கள் சந்தைக்கு வந்தாலும், சில நிறுவனங்கள் மட்டுமே டிஜிற்றல் உலகின் சக்கரவர்த்திகளாகத் திகழ்கின்றன.




அவற்றில் சொனி, பிலிப்ஸ், பைனியர் ஆகியன சிலவாகும். தற்போது வந்திருக்கின்ற டிஜிற்றல் எம்பி 3 வோக்மனில் ஏறக்குறைய 16,000 பாடல்கள் வரை கேட்கக் கூடியதாக இருக்கின்றது.

# மீண்டும் போயிங்





புதிய புதிய விமானங்களைக் கண்டுபிடிக்கப்படும் முயற்சிகளில் ஒன்றாக - நவீன விமானங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சிகளில் தொழில்நுட்பவியலாளர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இதற்குப் பில்லியன் டொலர்கள் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 13777-300 ஈ.ஆர் விமானத்தின் உற்பத்திச் செலவு ஏறக்குறைய 3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

உலகிலேயே முன்னணி விமான நிறுவனங்களில் ஒன்றாகிய டுபாயின் எமிரேட்ஸ் நிறுவனம் ஏ-380 சூப்பர் ஜம்போ விமானங்களை உற்பத்திசெய்வதற்கு 7 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலிட்டிருக்கின்றது. ஆரம்பத்தில் 555 இருக்கைகளை மட்டுமே கொண்டிருந்த இந்தவகை விமானங்கள் - தற்போது 800 இருக்கைகளுடன் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. போயிங் விமானத்தை மறந்திருந்த சர்வதேச உலகம் தற்போது மீண்டும் திரும்ப ஆரம்பித்திருக்கின்றது. இதற்கு ஏ-380 திட்டம் எனப் பெயரிட்டிருக்கின்றது. இதனுடைய திட்டச்செலவு 11 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். 1992 ஆம் ஆண்டிலிருந்து விமானங்கள் கண்டுபிடிப்பில் மிகவும் முக்கியமான புரட்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. அதிலும் போருக்கு விமானங்களைப் பாவிப்பது மிகவும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

## திரை விமர்சனம்

# சுள்ளான்



தொடர்ச்சியாக நல்ல படங்களை வெற்றிப் படங்களாகத் தந்த தனுஷிற்கு இந்தப் படம் சற்று சரிவைக் கொடுத்திருக்கிறது.

கோபக்காரனாகிய 'சுள்ளான்' தனுஷ் மாநகராட்சி குப்பை வண்டி ஓட்டுநர் மணிவண்ணனின் மகன் தன்னுடன் கல்லூரியில் படிக்கும் சிந்துதுலானியுடன் தனுஷிற்கு மோதல் ஏற்படுகின்றது. அதன் பின்பு காதல் வருகின்றது. பக்கத்து வீட்டுப் பெண்ணுக்காக தாதா பசுபதியிடம் தனுஷின் தாய் பரிந்து போகின்றார். அவரைப் பசுபதி கேவலமாகப் பேசுகின்றார். இதனால், பசுபதிக்கும் தனுஷிற்கும் மோதல் ஏற்படுகின்றது.

'சுள்ளான்' தனுஷிற்குப் பொருந்தாத 'பாட்ஷா' வேடத்தை இயக்குநர் கொடுத்திருக்கிறார். ரஜினி மாதிரி வசனங்கள் பேசமுயன்ற தனுஷ் தோற்றுப்போயிருக்கிறார்.

வில்லன் பசுபதி வில்லத்தனம் செய்கிறாரா? அல்லது காமடி செய்கிறாரா? ஒன்றும் விளங்கவில்லை. சிந்துதுலானி பெரிய நடிப்பைக் காட்டவில்லை.

பாடல் காட்சிகளில் மட்டும் ஓரளவு தன்னுடைய திறமையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

திருமலை என்ற வெற்றிப்படத்தைத் தந்த இயக்குநர் ரமணாவா இதனை இயக்கிருக்கிறார் என்று கேட்குமளவுக்கு பொறுப்பற்ற தனமாக இருந்திருக்கின்றார். இயக்குநர் ரமணா வெறும் வசனம் மட்டும்பேசி நடித்து, வெற்றிப் படம் தருவது என்பது மிகவும் கடினம் என்பதை இயக்குநர் புரிந்து கொள்வது நல்லது. தனுஷ் பறந்து பறந்து சண்டைபோடுவது தேவையில்லாத வேலையாகத் தோன்றுகின்றது. வித்தியாசாகரின் இசையில் ஹரிகரன் சுஜாதா பாடும் 'யாரோ நீ...' என்ற பாடல் சுகமாக இருக்கின்றது.


ஒளிப்பதிவாளர் ராகவின் திறமைத்துவமாகத் தெரிகின்றது.

'சுள்ளான்' வெறும் சத்தவெடி.

- ஜெயா -

# சிக்கலில் சொனி


ஐரோப்பாவில் விதம்விதமான ரீ.வி கேம்கள் வந்து, பிள்ளைகளின் படிப்பு மற்றும் இதர செயற்பாடுகளைக் கெடுக்கத் தொடங்கிவிட்டன. மொட்சிப்ஸ் என அழைக்கப்படுகின்ற சொனி நிறுவனத்தின் புதிய ரீ.வி கேம் சிப்ஸ் பிளேஸ்டேசன் 2 மூலம் இயங்கக்கூடியது.




தற்போது இது நீதிமன்றத் தடையை எதிர்நோக்கியிருக்கின்றது.

ஏனெனில், உலகளாவிய ரீதியில் சட்டபூர்வமற்ற தயாரிப்புக்கள் சந்தையில் உலாவருகின்றன. இதன்காரணமாக உண்மையான சிப்ஸ்களைப் பாதுகாப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. கடந்த ஒக்டோபர் மாதம் பதிவுசெய்யகூடிய உரிமையை சொனி நிறுவனம் கொடுத்திருந்தது. இதன்மூலம் சிரபிராட் கம்பனிகள் இந்த விடியோகேம் சிப்ஸ்களை போலியானதாக விற்றிருக்கின்றார்கள். ஏறக்குறைய 1500 போலி சொனி சிப்ஸ்கள் சந்தையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. உலகம் முழுவதும் மிகப் பெரிய கம்பனிகள் தயாரிப்புக்களைப் போலியாகத் தயாரித்து, விற்பனை செய்யக்கூடிய பல பெரிய கம்பனிகள் காணப்படுகின்றன. ஆனால், இதேபோன்ற சிப்ஸ் - பெல்ஜியம் நாட்டிலும், ஸ்பெயின் நாட்டிலும் தயாரிக்கப்பட்டு சந்தையில் விடப்பட்டிருக்கின்றது.

# திமிங்கல வேட்டை



கிறீன்லாந்திலே காணப்படுகின்ற திமிங்கலங்களில், பல இனங்கள் தொடர்ச்சியாக வேட்டையாடப்பட்டுக்கொண்டு வருவதனால், அங்கே திமிங்கல இனங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. இத்தாலியில் நடைபெற்ற சர்வதேச திமிங்கலங்கள் பற்றிய மாநாட்டில் இது விமர்சிக்கப்பட்டு, அத்துடன் இந்த மிருகங்களைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகள் பற்றி ஆராயப்பட்டது. பிரதானமாக ஆர்டிக் வட்டத்தில் இருக்கின்ற கரீபியன் தீவுகளில் திமிங்கலங்கள் உணவுக்காக வேட்டையாடப்படுகின்றன. கிறீன்லாந்தில் காணப்படுகின்ற 10 மீற்றர் நீளமான திமிங்கலங்கள் காணப்படுகின்றன. இதே வேளை, புளூவேல் எனப்படுகின்ற 20 மீற்றர் நீளமும், 75 தொன் நிறையுடையதுமான திமிங்கலங்கள் காணப்படுகின்றன.



1986 ஆம் ஆண்டிலிருந்து இந்தத் திமிங்கல வேட்டை தொடச்சியாக நடைபெற்றுவருகின்றது. கிறீன்லாந்தில் இப்போது நவீன ஆயுதங்கள் பாவிக்கப்பட்டு, திமிங்கலங்களின் வேட்டை நடைபெற்றுவருகின்றது. இந்தத் திமிங்கலங்களின் வேட்டைமூலம் வருடா வருடம் 100,000 ஸரேலிங் பவுண்கள் வரையில் வருமானம் கிடைக்கின்றது. இருந்தாலும் தொடர்ச்சியாகத் திமிங்கில வேட்டை நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றதாம்.


# விலை கூடிய மலர்கள்

அரிதான மலர்களை விற்பனை செய்வதில் இங்கிலாந்திலுள்ள கோல்ப் கிளப் நிறுவனம் ஒன்று முன்னணியில் திகழ்கின்றது. அண்மையில் விற்கப்பட்ட ஓர்க்கிட்வகை மலர் ஒன்று ஏறக்குறைய 2000 ஸ்ரேலிங் பவுண்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருக்கின்றது.



இதேவேளை, இத்தகைய மலர்களை களவெடுத்து சிலர் விற்பதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அரிதான இந்த ஓர்க்கிட் மலர்களின் நிறங்கள் மஞ்சளாகவும் மற்றும் மறூண் நிறமாகவும் இருக்கின்றன. குறிக்கப்பட்ட சில வருடங்களில் மட்டும்தான் இந்த வகையான மலர்கள் கிடைப்பதாகவும், சில வருடங்களில்- இந்தவகை அரிதான மலர்கள் பெறப்படுவது இல்லை எனவும் கூறப்படுகின்றது. இப்போது இந்தப் பூக்களின் விதைகளைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் முண்டியடிக்கின்றார்கள். ஏனென்றால் தங்களுடைய வீடுகளையும் இந்த மலர்கள் அலங்கரிக்கட்டும் என்று. ஆனால், சில்வர் டேல்கோல்ப் கிளப் மட்டுமே இந்த மலர்களை விற்பனை செய்வதற்கான முழு உரிமையையும் பெற்றக்கொண்டுள்ளது. ஆகவே, இந்த மலர்களைத் தனியார் பெறுவதில் பகீரதப் பிரயத்தனம் தெரிகின்றது.


# சூரியக் குளியல்



சூரியக் குளியல் உடம்புக்கு மட்டுமல்ல, மனதுக்கும் நல்லது என்ற கருத்து இருக்கின்றது. இது இயற்கையாக இருக்கின்ற இரத்தச்சுற்றோட்டத்தின் போக்கை மாற்றி, ஒரு சிறிய தூண்டலைக் கொடுக்கக் கூடியது என்கிறார்கள் விஞ்ஞானிகள். இதேவேளை - சூரியக் குளியலினால் புற்றுநோய் வரக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் நம்பப்படுகிறது. இதற்குக் காரணம் சூரியக்குளியலில் பாவிக்கப்படுகின்ற அல்ட்ரா வயலட் கதிர்கள் உடலுக்குத் தீங்கானவை. இப்போது மேல் நாடுகளில் சூரியக்குளியலின்போது, யுவி கதிர்கள் 95 வீதமாக இல்லாமல் செய்யப்பட்டிருக்கின்றன. பல நோய்களுக்கு சூரியக்குளியல் நல்லமருந்தாக அமைந்திருக்கின்றது. ஆனாலும், இயற்கையாகக் கடற்கரையில் எடுக்கின்ற சூரியக் குளியலுக்கும், செயற்கைச் சூரியக் குளியலுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கின்றது. செயற்கையில் தேவைக்கேற்றவாறு வெப்பம் கூட்டப்படுகிறது. இதன்காரணமாக இரத்தச் சுற்றோட்டத்தில் சில பாதிப்புக்கள் வருவதற்கு வாய்ப்பாகின்றது. ஆனாலும், உலகளாவியரீதியில் பெருமளவு மக்கள சூரியக் குளியலை கிழமைக்கு ஒரு தடவையாவது எடுத்து உடலுக்குப் புத்துணர்வூட்டுகின்றார்கள்.

# எஸ் எம் எஸ் தகவல்கள்

கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளர்கள் தொலைபேசி அழைப்பை எடுப்பதைத் தவிர்த்துவிட்டு, தகவல்களைக் கையடக்கத் தொலைபேசிகளில் அனுப்புவதை வாடிக்கையாக்கியிருக்கின்றார்கள்.



இது ஒரு சாதனையாகக் கருதப்பட்டு இருக்கின்றது. 2.1 பில்லியன் தகவல்கள் கையடக்கத் தொலைபேசிகளின் மூலம் பரிமாறப்பட்டிருக்கின்றன - 2003 ஆம் ஆண்டில் மட்டும். 1999 ஆம் ஆண்டில் பரிமாறப்பட்ட கையடக்கத் தொலைபேசித் தகவல்கள் இதனுடன் ஒப்பிடும்பொழுது, மிகவும் குறைவு என்ற கருத்து ஆய்வாளர்களிடையே இருக்கின்றது. இதேவேளை - நடைபெற்று முடிந்த 2004 ஆம் ஆண்டு யூரோ கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளின் போது பரிமாறப்பட்ட தகவல்கள் மட்டும் மிகவும் அதிகம் என்றும் ஆய்வுகள் கூறுகின்றன. இந்தச் சுற்றுப்போட்டிகள் நடைபெறும் இடங்களுக்கான அனுமதிச் சீட்டுக்களைக் கையடக்கத் தொலைபேசிகள் - கொடுக்கப்படும் இந்தத் தகவல்கள்மூலம் பெறக்கூடியதாக இருந்தது. இது தகவல்களைப் பரிமாறுகின்ற நிலையத்தில் ஒரு நெருக்கடி நிலையைத் தோற்றுவித்து, அங்கே கொடுக்கப்பட்ட தகவல்களை எல்லாம குழப்பியிருந்தது. இப்படியான நெருக்கடிகளைத் தவிர்க்க, சந்தேக மொழிக்குறியடுகளைக் கொடுக்கக்கூடிய திட்டம் இருப்பதாகக் கூறப்படுகின்றது.




# முல்லை. மாவட்டத்தில் பல வீதிகள் மிக மோசமாக சேதமடைந்துள்ளன

முல்லைத்தீவு மாவட்டத்துக் குட்பட்ட மூன்றுமுறிப்பு - பனங்காமம் கிராமங்களுக்கான போக்குவரத்து வீதி மிக மோசமாக சேதமடைந்திருக் கின்றது.

கடந்த காலங்களில் ரணகோஷ இராணுவ நடவடிக்கைக்கு முன்ப தாக இந்தப் பாதை வழியாக வன் னிக்கான லொறி தொடர் சேவை இடம்பெற்றதால், இந்த வீதி சீர மைக்கப்பட்டிருக்கின்றது.

ரணகோஷ இராணுவ நடவடிக் கைக்குப் பின்பு படையினர் இந்த பாதையினை அதிகமாகப் பயன்படுத் தினர். டாங்கி உட்பட, கனகரக வாகனங்கள் இந்த வீதி வழியாக சென்றதால், பெருமளவு சேதமடைந்து காணப்படுகின்றது.

இந்த வீதி சேதமடைந்து இருப்பதால், மக்கள் போக்குவரத் தினை மேற்கொள்ள முடியாதநிலை காணப்படுகின்றது.

இந்தப் பகுதியில் பெருமளவில் மக்கள் மீள் குடியமர்ந்து வரு கிறார்கள்.

மூன்றுமுறிப்பு - பனங்காமம் சின்னவலயன்கட்டு, பெரிய வல யன்கட்டு, குஞ்சுக்குளம் ஆகிய கிரா மங்களைச் சேர்ந்த மக்கள் போக்கு வரத்துச் செய்ய முடியாதநிலை காணப்படுகின்றது.

இந்த வீதியில் பஸ் போக்கு வரத்து நடைபெறாத காரணத்தால், மல்லாவி மருத்துவமனைக்கு செல்ல வேண்டிய மக்கள் - 6 மைல் கள் சைக்கிள்களில் சென்று, அதற்குப் பின்னரே பஸ்களில் பயணிக்க வேண் டியுள்ளது.

மூன்றுமுறிப்புக்கு முழுமையாக பேருந்து போக்குவரத்து இடம் பெறுவ தில்லை. இந்தப் பகுதியில் மருத் துவமனைகள் எவையும் இல்லாத நிலையே காணப்படுகின்றது.

## முழங்காவிலில் சுயதொழில் முயற்சிக்கு கடன்

யு.என்.டி.பி. நிறுவனத்தின் அனு சரணையுடன் - கிளிநொச்சி பெண் கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவ னத்தால், முழங்காவில் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 11 பயனாளிக ளுக்கு சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் வழங்கப்பட்டது.

முழங்காவில் கிராம பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் ம.செல்வி தலைமை யில் நடைபெற்ற இந்த நிகழ்வின் போது, முழங்காவில் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 11 பயனாளி களுக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது.

இதன்மூலம் பயனாளிகள் கோழி வளர்ப்பு, வியாபாரம் போன்றவற்றை மேற் கொள்ள ஊக்குவிக்கப்பட்ட னர்.

(பா)

## திருத்தப்படாத வீதிகளால் போக்குவரத்து அசௌகரியம்

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பல வீதிகள் திருத்தப்படாதிருப்ப தால், பொதுமக்கள் பெரும் சிரமங் களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல வீதிகள் கிரவல் வீதிகளாகவும், மண் வீதிகளாகவும் காணப்படுகின் றன.

அவற்றைப் புனரமைப்பதற்கான எந்தவொரு நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படாமையால், இந்த வீதி கள் பெரும் சேதமடைந்த நிலை யில் காணப்படுகின்றன.

வாகனங்கள் பயணிக்கும்போது ஏற்படும் புழுதியால் இந்த வீதியூடா கப் பயணிக்கும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனைவிட, சுவாச நோய்களுக் கும் ஆளாகவேண்டிய நிலைக்குப் பயணிகள் உள்ளாக்கப்படுகின்றனர்.

இரவு நேரங்களில் இந்த வீதியூ டாகப் பயணிப்போர் பெரும் சிரமங் களை அனுபவிக்க நேரிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து அரச அதிகாரிகள் எவரும் கவனமெடுக்கமாலிருப்பது அந்தப் பகுதி மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

## முல்லை மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளினால் 3300 பேர் விதவைகளாக்கப்பட்டனர்

முல்லைத்தீவு மாவட்டத்தில் 3300 பெண்கள் கணவன்மாரை இழந்துள்ளதாக, முல்லைத்தீவு அரச செயலக புள்ளிவிபரங்கள் மூலம் தெரியவருகிறது.

முல்லைத்தீவில் இந்திய இரா ணுவத்தினர் மற்றும் இலங்கை இரா ணுவத்தினர் மேற்கொண்ட போர் நடவடிக்கைகளினாலேயே இந்த இழப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

1990 ஆம் ஆண்டு முல்லைத் தீவை ஆக்கிரமிக்க இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்ட கடற் காற்று படை நடவடிக்கையின்போது மக்கள் இடம்பெயர்ந்து வேறு இடங் களுக்குச் சென்ற பின்னர் மேற் கொள்ளப்பட்ட தாக்குதல்களின் போது, பல நூற்றுக் கணக்கான பெண்கள் தமது கணவன்மாரை இழந் தமை குறிப்பிடத்தக்கது.

## முள்ளியவளை மத்திய மருந்தகத்தில் வைத்தியர்கள் பற்றாக்குறை

முல்லைத்தீவு முள்ளியவளை மத்திய மருந்தக மகப்பேற்று விடு தியில், மீள் நியமனம் பெற்ற மருத் துவரே தற்போது கடமையிலுள்ளார்.

குறிப்பிட்ட வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள வைத்தியர்கள் பற்றாக் குறை காரணமாகவே, மீள்நியமனம் பெற்ற வைத்தியரே நீண்டகாலமாக கடமையாற்ற வேண்டிய நிலை ஏற் பட்டுள்ளது.

இந்த வைத்தியர் விடுமுறை நாட் களில் வீடு செல்லும்போது, பதில் கடமையாற்ற மருத்துவர் இன்மை யால், நோயாளர்கள் பெரும் சிரம மடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கேரதீவு - சங்குப்பிட்டி வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

கேரதீவு - சங்குப்பிட்டி வரையான வீதியைச் சீரான போக்குவரத் துக்கு ஏற்றவாறு செப்பனிடப்பட வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் உரிய தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பூநகரிக்கான பரந்தன் இணைப்பு வீதியின் ஒரு பகுதி மட்டுமே தார் ஊற்றிச் செப்பனிடப்பட்டுள்ளது. பெரும்பாலான பகுதி - கிரவல் மண் ணினால் செப்பனிடப்பட்டிருப்பதால், வாகனங்கள் செல்லும்போது கிளப் பப்படுகின்ற புழுதி - மக்களைத் துன்புறுத்துகின்றது.

இதேவேளை, 12 ஆண்டுகளின் பின்னர் பூநகரி நகரம் மீண்டும் புனரமைக்கப்பட்டு மக்கள் மீளக் குடியமர்ந்து வருகின்றனர்.

உதவி அரசாங்க அதிபர் பணிமனை, பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், மருத்துவமனை, கல்விப் பணிமனை, சந்தை என்பன புனரமைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


படம் : திரு

## நியாப் திட்ட அதிகாரிகளுக்கு இந்தியாவில் விசேட பயிற்சி

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உலக வங்கியின் நிதியுதவியுடன் அமுல படுத்தப்படும் நியாப் திட்டத் துடன் தொடர்புடைய அதிகாரிகள் 25 பேருக்கு நேற்றுமுன்தினம் முதல் இந்தியாவில் விசேட பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

எதிர்வரும் 15 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி நெறிக்கு வவுனியா மாவட்டத்திலி ருந்து தலா 7 பேரும், அம்பாறை மற்றும் மட்டக்களப்பிலிருந்து தலா 4 பேரும், அநுரதபுரம் மற்றும் கிளி நொச்சி மாவட்டத்திலிருந்து 3 பேரும், முல்லைத்தீவிலிருந்து 2 பேரும், திரு கோணமலை, மன்னார் மாவட்டங்க ளிலிருந்து தலா ஒருவருமாக 25 பேர் இந்தப் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றினர்.

## கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கை காரணமாக மீன்பிடித் தொழில்கள் பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தற் போது 4 ஆயிரத்து 202 மீனவர் கள கடும் நெருக்கடிகளுக்கு மத்தி யில் கடற்தொழிலில் ஈடுபட்டுள்ள னர்.

கடந்த காலங்களில் 6 ஆயிரத் துக்கும் மேற்பட்ட மீனவர்கள் தொழி லில் ஈடுபட்டனர். தொடர்ந்து இடம் பெற்ற இராணுவ நடவடிக்கை கார ணமாக மீனவர் இடம்பெயர்ந்து வெவ்வேறு இடங்களில் தங்கிவிட்டு, தற்போது இங்கு வந்து மீளக்குடிய மர்ந்துள்ளனர். இவர்களில் 4202 மீன வர்கள் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் முன் னர் 15 லொறிகளில் கடலுணவுகள் ஏற்றப்பட்டு, தென்னிலங்கைக்கு அனுப்பி வருமானம் பெறப்பட்டது.

ஆனால், தற்போது 2 லொறிக ளில் மட்டுமே கடலுணவுகள் ஏற்றப் படுகின்றன.

கடந்த காலங்களில் இலங்கை யின் பொருளாதார வளர்ச்சியில் எட்டுவீதம் பங்கெடுத்த கிளிநொச்சி மாவட்ட கடலுணவு உற்பத்தி - தற் போது வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

## வேலையற்ற பட்டதாரிகள் நியமனத்தில் பின்தங்கிய மாவட்டங்கள் புறக்கணிப்பு

### செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

பட்டதாரிகள் நியமனம் தொடர் பில் பின்தங்கிய மாவட்டங்களில் வேலையற்றிருக்கும் பட்டதாரிகள் பாதிப்படைந்துள்ளதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டி மெலுக்கு கடிதமொன்றை அனுப்பி யுள்ளார்.

பட்டதாரிகளுக்கு வேலை வழங் கும் புதிய அரசின் திட்டத்தின்கீழ் 17 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது. இதன் போது வன்னி மாவட்டப் பட்ட தாரிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

பின்தங்கிய மாவட்டத்தில் தொடர்ந்து பணியாற்றக்கூடியவர்க ளையே நியமிக்க வேண்டும். அப் போது தான் இந்தப் பகுதி மாண வர்கள் கல்வியில் முன்னேற்றம் அடைவர்.

அத்துடன், அந்தப் பாடசாலை களின் வசதிகளும் உயர்த்தப்பட வேண்டும் என்றும் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

## நெருக்கடிகளுடன் இயங்கும் பூநகரிப் பிரதேச செயலகம்

(கிளிநொச்சி)

1991 ஆம் ஆண்டு மேற்கொள் ளப்பட்ட வலம்புரி இராணுவ நட வடிக்கை மூலம், பூநகரிப் பகுதியை ஆக்கிரமித்திருந்த இராணுவத்தினர் பூநகரிப் பிரதேசத்தில் பெருமளவு அழிப்பு நடவடிக்கைகளில் ஈடு பட்டிருந்தனர்.

அப்போது பூநகரிப் பிரதேச செயலகக் கட்டடங்களும் அழிக்கப் பட்டன.

தற்போது இந்தப் பிரதேச செய லகம் தனியார் வீடொன்றிலேயே, நெருக்கடிகளின் மத்தியில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(தி)

## 'சங்கமம்' இதழ் மீண்டும் வெளியாகியது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபையின் இதழான சங்கமம் மீள வும் வெளிவருகின்றது.

1998 முதல் கிளிநொச்சியின் அக்கராயனிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த சங்கமம் இதழ் - போர் நிறுத்த உடன்பாட்டின் பின் கிளி நொச்சியிலிருந்து இடம்பெயர் கூட்டுறவுச் சங்கங்கள் தம் சொந்த இடங்களுக்குத் திரும்பியதையடுத்து வெளிவருவது தடைப்பட்டது.

அதன் பின் ஒரு இதழ் மட்டும் வெளிவந்து, பின்னர் தடைப்பட்டது. இப்பொழுது அது மீளவும் வெளி வரத் தொடங்கியுள்ளது. இதன் அறிமுக விழா கடந்த வாரம் பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் சிறப்புற நடைபெற் றது.

சங்கமம் இதழ் போர்க் காலத்தில் கிளிநொச்சியில் கூட்டுறவுப் பணிக ளின் நெருக்கடிகளைப் பதிவு செய்து வந்துள்ளது.

## அறிவகம் திறப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி விநாயகம் கிராமத் தில், லெப்டினன்ட் கேணல் திலீப னின் பெயரில் நிறுவப்பட்ட அறி வகம் அண்மையில் திறந்துவைக் கப்பட்டது.

ஊடக வளர்ச்சித் தலைவர் அலெகஸ் தலைமையில் நடை பெற்ற இந்த திறப்புவிழா நிகழ் வில், பொதுச்சுடரினைக் கிராம அலுவலர் வைரவநாதன், மானிட விழுதுகளின் செயலாளர் சுமதி ஆகியோரும், தமிழீழத் தேசியக் கொடியை ஊரக வளர்ச்சிப் பொறுப் பாளர் அன்பரசனும் ஏற்றி வைத்த னர்.

அறிவகத்தைப் புலம்பெயர்ந்து லண்டனில் வசித்த குலதுங்கம் நாடாவை வெட்டித் திறந்து வைத் தார்.




கிளிநொச்சி - கண்டாவளையில் புலிகளின் குரல் வானொலி மன்றத்தினர் நடத்திய மாதாந்த முத்தமிழ் கலையரங்கத்தில் பங்குபற்றிய ஒருவருக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கி கௌர விக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

படம் : பாஸ்கரன்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*முன்உறக் காவாது இழுக்கியான் தன்பிழை*
*பின்ஊறு இரங்கி விடும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## நிராகரிக்கப் படவேண்டிய மறுப்புகள்

பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும் என்று கூறுவார்கள். பொருத்தமற்ற வகையிலும், நகைப்புக்கிடமான விதத்திலும் பொய்களைச் சொல்லி, அதனை நியாயப்படுத்த முனைந்து தோல்வியடைந்து, தலைகுனிந்து மௌனம் காப்பதில் அரசுக்கு நிகர் அதுவேதான்.

ஐ.ம.சு. முன்னணி ஆட்சியை அமைத்தது முதல் இன்று வரை சமாதான முயற்சிகள், கிழக்கின் குழப்பங்கள், கருணா விவகாரம் போன்ற பல விடயங்கள் தொடர்பாகவும், அரசு வெளியிட்ட கருத்துக்களும், அறிக்கைகளும் எத்தனையோ பொய்களை ஜீரணிக்க முடியாத வகையில் உள்ளடக்கியிருந்ததை அனைவரும் அறிவர்.

ஆரம்பத்தில் கருணா விவகாரத்தில், அரசுக்கும் - அரச படைகளுக்கும் உள்ள தொடர்புகள் வெளிப்படையாகவே சகலருக்கும் தெரியவந்தபோதும், அரசும், அரச படைகளும் அதனை நிராகரிப்பதில் காட்டிய வேகம் பகட்டிற்கிடமான தொன்றாகவே ஊடகங்களால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

ஒருபக்கம் அரச பாதுகாப்புத் தரப்பு கருணாவுக்கும் தமக்கும் எவ்விதமான தொடர்புமில்லையென்று மறுக்க, அமைச்சர் மங்கள சமரவீர அதனைப் பகிரங்கமாகவே ஒப்புக் கொண்டு அறிக்கை விடுகிறார். மற்றொரு அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா தனக்கும் கருணாவுக்கும் நேரடித் தொடர்பு இன்னமும் இருப்பதாக ஒப்புக்கொண்டு பேட்டியளித்தபோதே அரசின் பொய்மை வெளிப்பட்டது.

பின்னர், கருணாவின் சிங்கப்பூர் விஜயம் குறித்த செய்திகளில் - அநுராவின் பெயரும் சேர்ந்து வந்தபோது அநுரா தனக்கு, கருணா என்பவரையே தெரியாதென்று அறிக்கை விட்டார். அரசுக்குத் தெரியாமல் கட்டுநாயக்கா வழியாக விமானமூலம் கருணா சிங்கப்பூர் செல்வதென்பது - இலங்கையின் புலனாய்வுப் பிரிவையே ஏமாளிகளாக்கும் செயலல்லவா? அந்த அளவுக்கு இலங்கையின் புலனாய்வு அமைப்பு பலவீனமாக இருக்கிறதென அரசே ஒப்புக் கொள்கிறதா?

சரி அதைத்தான் விடுவோம், கொட்டாவ பாதுகாப்பு மறைவிடப் படுகொலைகள் எதனை நிரூபிக்கின்றனவாம்? கொல்லப்பட்டவர்களில் ஒருவரான தம்மிக என்பவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவரல்ல என்று - இராணுவத் தரப்பு முதல் மறுத்தாலும், பின்னர் அவர் இராணுவத்திலிருந்து விலகியவரென்று செய்திகள் கூறின. அப்படியானால் அந்தப் பாதுகாப்பு மறைவிடத்தில் கருணாவின் ஆட்களுடன் அவர் ஏன் மறைந்திருந்தார்? அந்த இடம் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் இரகசிய நடவடிக்கைகளுக்கான பாதுகாப்பு மறைவிடம் என்பதையும் படைத்தரப்பு மறுக்கப் போகின்றதா? முடியவே முடியாது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் இரகசிய நடவடிக்கைகளுக்கான பாதுகாப்பு மறைவிடத்தில் கருணா கும்பலைச் சேர்ந்தவர்கள் தங்கியிருந்தமையானது - இருதரப்பினருக்குமிடையேயான இறுக்கமான தொடர்பினை வெளிப்படுத்துகின்றதல்லவா? இனிமேலும் இதனை மறைக்க முயல்வது மற்றவர்களை முட்டாளாக்கும் செயலல்லவா?

சரி அதுதான் போகட்டும்- இப்போது புதிதாக புளொட் மோகன் விவகாரம் தோன்றியுள்ளது. இதனையும் வழமை போன்று இராணுவத் தரப்பு மறுத்துள்ளது. அதாவது, தமக்கும் புளொட்மோகனுக்கும் எவ்வித தொடர்புமில்லையென்று இராணுவப் பேச்சாளர் அடித்துக் கூறியுள்ள அதேசமயம், இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் தொடர்புடையவர் புளொட்மோகன் என்பதை - பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்குக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் திலக் ரணவீராஜா ஒப்புக் கொண்டுள்ளார்.

இதனையடுத்து, முதலில் மறுப்புத் தெரிவித்திருந்த இராணுவப் பேச்சாளர் இப்போது அரைகுறை ஒப்புதல் வாக்கு மூலம் ஒன்றைத் தெரிவிக்க வேண்டியவராகியுள்ளார்.

புளொட்மோகன் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் இல்லையாம்! ஆனால், அவர்களுக்குத் தகவல்களை வழங்கும் ஒருவராம்....! எப்படியிருக்கிறது கதை?


புளொட்மோகன் கொலையுண்டவுடனேயே அவரைப்பற்றிய தகவல்களை - அவர் முதலில் அங்கம் வகித்த புளொட் அமைப்பின் பிரமுகர்கள் வெளிப்படுத்திவிட்டனர். இராணுவத் துணைப்படையைச் சேர்ந்த மோகன் 1983 முதல் 1993 வரை புளொட் அமைப்பில் இருந்ததாகவும், அதன்பின் அவரும் அவரது சில சகாக்களும் இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தமையானது இராணுவத் தரப்பு நிராகரிப்பதன் பொய்மையை வெளிப்படுத்தி விட்டது.

கருணா கிழக்கில் குழப்பங்களை ஏற்படுத்த ஆரம்பித்த வேளையில் அவரை அரசுக்கும், இராணுவத் தரப்புக்கும் அறிமுகம் செய்து, பாதுகாப்பு வழங்கியதுடன்- கிழக்கில் அண்மைக காலத்தில் நடைபெற்ற வன்செயல்கள், கொலைகள் ஆகியவற்றிற்கு பின்னணி ஆதரவுச் சக்தியாகவும் இயங்கியவர் இந்தப் புளொட் மோகன் தான் என்பது மட்டுமல்ல, கடந்த பல வருடங்களாக படைத்தரப்பினருடன் இணைந்து கொண்டு இவர் செய்த சமூக விரோத - தமிழின விரோத - குற்றச் செயல்களுக்கும் இவர் தான் காரணமென்பது அனைவருக்கும் தெளிவான ஒரு விடயமாகும்.

இந்த வகையில், கருணா - புளொட்மோகன் - இராணுவம் - அரசு ஆகியோருக்கிடையேயான தொடர்பென்பது எந்தவகையிலும் மறைக்க முடியாத விடயமென உறுதிப்படுத்தப்பட்டுள்ளதென்றே கூறவேண்டும்.

இவர்களுடனான தொடர்புகளும், அவற்றின் அடிப்படையிலான செயற்பாடுகளும் சமாதான முயற்சிகளை சிதைத்துவரும் என நன்கு தெரிந்து கொண்டும். அரசு இவற்றிற்கு மௌன அங்கீகாரம் அளித்துவிட்டு, இப்போது தமக்கெதுவும் தெரியாதென அப்பாவித்தனமாகக் கைவிரிப்பதானது, தமிழ் மக்களையும் ஏனைய சமாதான விரும்பிகளான தென்பகுதி மக்களையும், சமாதானத்தை வலியுறுத்தி அதற்காக உழைத்துவரும் சர்வதேச சமூகத்தையும் 'பேய்க்காட்டும்' நடவடிக்கை என்பதில் ஐயமில்லை.

## நாடும் நடப்பும்




# பட்டதாரிகள் நியமனத்தில் முறைகேடு எதிர்த்து; நேற்று செயலகம்முன் மறியல்

(யாழ்ப்பாணம்)

பட்டதாரிகள் நியமனத்தில் பாரபட்சம் காட்டப்பட்டதாகத் தெரிவித்து, யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் - நேற்று யாழ். செயலகம் முன் மறியல் போராட்டமொன்றை நடத்தினர்.

வேலையற்ற பட்டதாரிகளை அரசதுறைகளில் வேலை வாய்ப்புக்காக ஆட்சேர்க்கும்பொருட்டு, கடந்தவாரம் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட பெயர்களில் எந்தவொரு ஒழுங்கமைப்பும் பின்பற்றப்படாமையால், யாழ். மாவட்டத்திலுள்ள பட்டதாரிகளில் பெருந்தொகையானோர் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தே இந்தப் போராட்டத்தை நடத்தினர்.

யாழ். செயலக வாயிலில் நேற்றுக்காலை 7 மணியளவில் ஒன்று திரண்ட நூற்றுக்கணக்கான வேலையற்ற பட்டதாரிகள் இந்த மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவர்களுடன் உயர் தேசிய கணக்கியல், வர்த்தகப் பட்டதாரிகள் சங்கத்தினரும் மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காலை 10.30 மணியளவில் யாழ். செயலகம் நோக்கிவந்த அரச அதிபரின் காரையும், ஊழியர்களையும் செயலக வளாகத்தினுள் செல்ல அனுமதியாது போராட்டம் நடைபெற்றது.

எனினும், யாழ். அரச அதிபர் - போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடனும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான - கஜேந்திரன், சிவாஜிலிங்கம், ரவிராஜ், பத்மினி சிதம்பரநாதன், சிவநேசன் போன்றோருடனும் .பேச்சில் ஈடுபட்டதன் பயனாக காலை 10.45 மணியளவில் யாழ். செயலக வாயில் திறக்கப்பட்டு செயலகத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதனையடுத்து யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும், வேலையற்ற பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகளுடன் தனது அலுவலக அறையில் வைத்துக் கலந்துரையாடல் ஒன்றை நடாத்தினார். அதில் பட்டதாரிகளின் கோரிக்கைகளைத் தான் அரசின் கவனத்துக்குக் கொண்டுவருவதாகவும், புதிய பெயர்ப் பட்டியலொன்றைத் தயாரிக்குமாறும் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக நிதியமைச்சருடன் பேசுவதுடன், நாடாளுமன்றத்திலும் பேசவுள்ளதாக, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதியளித்தனர்.

இதனையடுத்து யாழ். மாவட்ட வேலயற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் தமது போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக அறிவித்தனர். (ப)

# வெலிகந்தை பொலிஸ் சோதனை சாவடிக்கருகில் குண்டுவெடிப்பு

வெலிக்கந்தைப் பிரதேசத்தில் அமைந்துள்ள பொலிஸ் சோதனைச் சாவடிக்கு அருகில் நேற்றுமுன்தினம் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

செவனப்பிட்டிய பொலிஸ் சோதனைச் சாவடிக்கு அருகிலேயே இந்த குண்டுவெடிப்பு இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவரும் ஊர்காவல் படையினர் இருவரும் காயமடைந்தனர்.

இவர்கள் பொலனறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு, ஒருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் தெரியவருகிறது.

வெலிக்கந்தை பொலிஸ் சோதனைச் சாவடி அருகில் லொறியொன்றைச் சோதனையிட்டபோதே இந்த குண்டு வெடிப்பு இடம்பெற்றது.

இந்தப் பிரதேசத்தில் நடமாடிய ஒருவர் கைக்குண்டை வீசியிருக்கலாம் என்று பொலிசார் சந்தேகம் வெளியிட்டனர்.

எனினும், இந்த குண்டுவெடிப்புச் சம்பவம் எவ்வாறு இடம் பெற்றது என உறுதிப்படுத்தப்படவில்லை என்று பொலனறுவைக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்ச எம்.கே.சமங்கம தெரிவித்தார்.

# பாடசாலை அதிபர்களுக்கான எயிட்ஸ் நோய்க் கருத்தரங்கு

## நேற்று ஆரம்பமாகியது

மஹரகம தேசியகல்வி நிறுவனத்தினால் பாடசாலை அதிபர்களுக்கென நடாத்தப்பட்டுவரும் எயிட்ஸ் நோய் தொடர்பான கருத்தரங்கின் முதலாம்நாள் நிகழ்வுகள் நேற்று யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் ஆரம்பமாகியது.

யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட, 4 ஆம் வகுப்புக்கு மேற்பட்ட பாடசாலை அதிபர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்தக் கருத்தரங்கின் இரண்டாம்நாள் நிகழ்வுகள் இன்று இடம்பெறவுள்ளது.

குடாநாட்டுச் சமூகத்தினரிடையே எயிட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாகவே இந்தக் கருத்தரங்கு மஹரகம தேசிய கல்வி நிறுவனத்தினரால் நடாத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பட்டதாரிகள் அனைவருக்கும் ஒரே தடவையில் நியமனம்

## வழங்குமாறு பட்டதாரிகள் சங்கம் அரசிடம் கோரிக்கை

யாழ். மாவட்டத்திலுள்ள மூவாயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கும் ஒரே தடவையில் வேலைவாய்ப்பை வழங்குங்கள் என, யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் அரசிடம் கோரியுள்ளது. யாழ். செயலகம் முன் நேற்று நடத்தப்பட்ட மறியற் போராட்டத்தின் இறுதியில் யாழ். அரச அதிபரிடம் வழங்கப்பட்ட மகஜரிலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அரச அதிபரினூடாக நிதி அமைச்சு மற்றும் அரச தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் உள்ளடக்கப்பட்டிருந்த 4 கோரிக்கைகளும் பின்வருமாறு.

☆ பட்டம்பெற்ற ஆண்டின் அடிப்படையில் வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படல் வேண்டும்.

☆ யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துப் பட்டதாரிகளுக்கும் ஒரே நாளிலேயே அரசதுறை நியமனங்கள் வழங்கப்பட வேண்டும்.

☆ எச்.என்.டி.ஏ, எச்.என்.டி.சி, எச்,என்.டி.எம் மற்றும் சங்கீதம், நடனம் ஆகிய துறைகளில் பட்டம்பெற்றவர்களுக்கும் அரசதுறை நியமனங்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

☆ யாழ். மாவட்டத்திலுள்ள மூவாயிரம் பட்டதாரிகளுக்கும் அரசதுறை நியமனங்கள் வழங்கப்படுதல் வேண்டும்.


முதலான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட மகஜரே அரச அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ். மாவட்டத்திலுள்ள பட்டதாரிகள் அந்தந்த உதவி அரச அதிபர் பிரிவுகளில் மீண்டுமோர் பதிவை இன்று மேற்கொள்வதெனவும், அதனை அரச அதிபரினூடாக நிதி அமைச்சுக்கு அனுப்புவதெனவும் யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் முடிவெடுத்துள்ளனர்.

இந்த மகஜரை யாழ். மாவட்ட வேலையற்றோர் பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் என்.பிரபாகரன், யாழ். அரச அதிபரிடம் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தெற்குத்திசையினிலே... - இந்திரஜித்

# ஆபத்தான கட்டத்தை நோக்கிச்செல்லும் இலங்கையின் அரசியல் பயணம்



நாட்டின் அரசியல் ஆழ்ந்து யோசனை செய்யும் அளவுக்கு ஆபத்தானதாக மாறியுள்ளது. சாதாரண மக்கள் கூட கவலை கொள்ளும் அளவிற்கு அரசியலின் தாக்கம் மக்கள் மத்தியில் வியாபித்துள்ளது. வாழ்க்கைச் செலவின் உயர்வு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக மக்களின் சேமிப்பு தொகை குறைவடைந்துள்ளது அல்லது சேமிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்தை பொறுத்தவரை இந்த அம்சங்கள் யாவும் அதற்கு நன்கு தெரிந்த போதிலும் தமது அரசியலின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஒன்றுமே தெரியாதது போல இருந்து கொண்டு மக்களின் மனதை மாற்றும் செயற்பாடுகளில் கவனம் செலுத்துகிறது தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக கோரிக்கை தொடர்பான விடயத்தை முக்கியமானதாக கொள்ளாமல், அதனை விமர்சித்துக் கொண்டு அரசியல் நடத்துவது, தமிழீழ விடுதலைப்புலிகளை பலவீனப்படுத்தி அவர்களின் கோரிக்கை வலுவை குறைக்கச்செய்வது. எதிர்க் கட்சிகளின் அரசியல் வலுவை குறைக்கச்செய்வது போன்ற விடயங்களை மையமாகக் கொண்டு அரசாங்கம் இன்று மக்களை மாற்று திசையை நோக்கி இழுத்துசெல்கிறது.

முன்னர் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சி காலத்தில் கிரிக்கெட் போட்டிகளில் இலங்கை அணி வெற்றி பெறுவதைக் கொண்டு அத்தியாவசிய பொருட்களின் விலைகளை உயர்த்தி செல்லும் உத்தி ஒன்று மேற்கொள்ளப்பட்டதை அனைவரும் அறிவர்.

தற்சமயம் அதற்கான வாய்ப்பு குறைந்ததன் காரணமாகவே அரசாங்கம் சாதாரண மக்களையும் அரசியல் மயப்படுத்தும் திட்டத்தை முன்கொண்டு செல்கிறது. மக்கள் அரசியல் மயப்படுத்தப்படுவது ஒருநாட்டின் தூய அரசியல் வளர்ச்சியை மேம்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், இனவாதத்தை மையமாகக் கொண்டு நாட்டை எதிர் காலத்தில் பாதாளத்தில் தள்ளிவிடும் முயற்சிகளுக்காக மக்களை அரசியலுக்குள் பலாத்காரமாக தள்ளுவது நாட்டை மேலும் மேலும் பாதாளத்திற்கு அழைத்து செல்லும் முனைப்பாகவே அமைந்து விடும் என்பதில் ஐயமில்லை.

இன்று நாட்டில் சாதாரண சிங்கள மக்கள் கூட தமிழீழ விடுதலைப புலிகளுக்கு இடைக்கால நிர்வாகம் வழங்கப்படக்கூடாது எனக் கூறும் அளவிற்கு ஜே.வி.பி மற்றும் சிஹல உறுமய போன்ற அமைப்புக்களின் ஆதரவாளர்களாக இருக்கின்ற சிங்களவர்கள் தமது கருத்துக்களை தெரிவிக்கின்றனர்.

இது தமது நலனுக்காக பயிற்றப்பட்ட ஒரு கூட்டத்தின் எண்ணங்களாகவே எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது. ஏனெனில் மக்கள் உண்மையாக அரசியல் மயப்படுத்தப் பட்டிருந்தால் அல்லது அரசியல் மயப்படுத்தப்பட்டுக்கொண்டிருந்தால், அவர்கள் மாற்றுக் கருத்துக்கும் இடமளித்திருப்பார்கள்.

அதாவது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாகம் கொடுத்தால் நாடு பிளவுபடுமா? அலலது இடைக்கால நிர்வாகத்தை கொடுக்காவிட்டால் நாடு பிளவுபடுமா என்பதை குறிப்பிட்ட கட்சிகளின் ஆதரவாளர்களாக இருக்கக்கூடிய சிங்கள மக்கள் உணர்ந்து அதன் படி தமது கருத்துக்களை முன்வைக்க கூடியவர்களாக இருந்திருப்பர்.

எனவே இங்கு அரசியல் மயமானது ஆபத்தான கட்டத்தை நோக்கி சென்று கொண்டிருப்பதையே உணர முடிகிறது. தெளிவு என்பது ஒரு விடயத்தின் இரு பக்கங்களையும் ஆராய்ந்து பெறக்கூடிய ஒன்றாகும். ஒரு பக்கத்தை மாத்திரம் ஆராய்ந்து பெறக்கூடிய தெளிவானது. உண்மை தெளிவாகாது

அரசியல் தலைவர்களுக்கு மத்தியில் இடைக்கால நிர்வாக மோதல்

நாட்டில் இன்று பொதுமக்கள் மத்தியில் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக தெளிவற்ற நிலை காணப்படுவதைப் போலவே அரசியல் வாதிகள் மத்தியிலும் இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக தெளிவற்ற தன்மை காணப்படுகிறது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிகள் மத்தியில் இந்த போக்கை நாங்கள் தெரிந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது. சிறிலங்கா சுதந்திர கட்சி இடைக்கால நிர்வாகத்துக்கு தமது உடன்பாட்டை பொதுஜன ஐக்கிய முன்னணியாக இருந்த போதே தெரிவித்திருந்த கட்சி என்ற வகையில் அது தற்போதும் இடைக் கால நிர்வாக கோரிக்கைக்கு தமது உடன்பாட்டை தெரிவித்து வருகிறது.

ஆனால் அதனை எவ்வாறான இடைக்கால நிர்வாகமாக வழங்க வேண்டும் என்பதிலேயே அந்த கட்சி தடுமாற்றப்போக்கை கொண்டிருக்கிறது. தனிக்கட்சியாக,அல்லது முன்னரைப் போல பொதுஜன ஐக்கிய முன்னணி என்ற கட்டுக்குள் சந்திரிகாவின் சிறிலங்கா சுதந்திர கட்சி இருக்குமானால் இந்த இடைக்கால நிர்வாக பிரச்சினை பாரிய பிரச்சினையாக வந்திருக்க மாட்டாது.

ஆட்சியை மீண்டும் அமைக்க வேண்டும் என்பதற்காக ஜே.வி.பி என்ற கட்சியை இணைத்துக்கொண்டதன் காரணமாகவே தற்சமயம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மெல்லவும் விழுங்கவும் முடியாத நிலைக்கு ஆட்பட்டுவிட்டது.

இதனை எவ்வாறு சமாளிப்பது என்பதிலேயே இலங்கை சுதந்திர கட்சியின் உணமைக் கொள்கையை தக்க வைத்துக் கொள்ள முடியும். முன்னர் அதாவது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்ததும், ஜனாதிபதி இடைக்கால நிர்வாக யோசனை குறித்து நம்பிக்கையான தகவலையே தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு தெரிவித்திருந்தார்.

அதன் அடிப்படையிலேயே தமிழீழ விடுதலைப்புலிகளும் அதனை வரவேற்றனர். ஆனால் இடைப்பட்ட காலக்கட்டத்தில் ஜனாதிபதியினால் தமது கொள்கையை காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை. இதற்கு மக்கள் விடுதலை முன்னிணயின் இடைக்கால நிர்வாக கோரிகைக்கு எதிரான போக்கை மாத்திரம் காரணமாகக் கூற முடியாது.

ஜனாதிபதியின் தெளிவற்ற அரசியல் நகர்வும் இதற்கு காரணமாகும். தற்போதைய நிலைமையில் தமது சிறுபான்மை அரசாங்கத்தினால் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை தரமுடியாது என்பதை சந்திரிகா ஏன் உணரவில்லை என்பதை புரிந்து கொள்ள முடியவில்லை.

அவ்வாறு தம்மால் நிரந்தர தீர்வு ஒன்றை தரமுடியும் என அவர் நினைத்திருப்பாராக இருந்தால் அரசியலமைப்பில் இருக்கக்கூடிய இனப்பிரச்சினைக்கு தீர்வை எட்டும் வகையிலான நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்த அவர் ஏன் பின்னடிக்க வேண்டும், இவற்றுக்கு அவரால் பதில் தேட முடியாமல் போனமை காரணமாகவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்த போது சந்திரிகாவின் யோசனையை ஏற்றுக்கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளால் தற்சமயம் அவரின் மீதான நம்பிக்கையை முழுமையாக இழக்கச் செய்துள்ளது.





இந்த நிலையில் அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருக்கும் சிலரை சமாதான முயற்சிகள் தொடர்பாக கருத்துக்களை கூற வேண்டாம் என ஜனாதிபதி உத்தரவிட வேண்டிய நிலை தற்சமயம் எழுந்துள்ளது. ஏனெனில் சமாதானம் தொடர்பாக ஜனாதிபதி கூறும் கருத்துக்கும், அமைச்சர்கள் கூறும் கருத்துக்கும் பாரிய வேறுபாடுகளை காணக்கூடியதாக உள்ளது.

**அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருக்கும் சிலரை சமாதான முயற்சிகள் தொடர்பாக கருத்துக்களை கூற வேண்டாம் என ஜனாதிபதி உத்தரவிடவேண்டிய நிலை தற்சமயம் எழுந்துள்ளது. ஏனெனில் சமாதானம் தொடர்பாக ஜனாதிபதி கூறும் கருத்துக்கும், அமைச்சர்கள் கூறும் கருத்துக்கும் பாரிய வேறுபாடுகளை காணக்கூடியதாக உள்ளது.**

அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே தமிழீழ விடுதலைப் புலிகள் இடைக்கால நிாவாகத்தை கோருகிறார்கள் என்றால் அதனை வழங்கி உடனடியாக நாட்டில் உள்ள பிரச்சினையை தீர்ப்பதையே தாம் தனிப்பட்ட ரீதியில் விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

ஆனால் ஏனைய அமைச்சர்களான மங்கள சமரவீர, அனுர பண்டாரநாயக்க, நிமால் சிறிபால டி சில்வா போன்றோர் நிரந்தரத் தீர்வின் ஒரு அங்கமாகவே இடைக்கால நிர்வாகம் வழங்கப்படவேண்டும் என்ற இந்தியாவின் கொள்கையை பற்றி நிற்பதாக மறைமுகமாக ஐக்கிய தேசிய கட்சி குற்றம் சுமத்துகிறது.

மறுபுறத்தில் ஆளும்,அதுவும் சிறிலங்கா சுதந்திர கட்சிக்குள் அங்கம் வகித்துக் கொண்டு பிரதி அமைச்சராக இருக்கும் முன்னாள் கிரிக்கெட் அணி தலைவரான அர்ஜுன ரணதுங்க, ஜே.வி.பியுடன் இணைந்துக் கொண்டு இடைக்கால நிர்வாகம் பற்றியே பேசக்கூடாது என்ற கோசத்தை தேச இத்தைசி (தேச பற்றாளர்கள்) எனப்படும் அமைப்பின் உறுப்பினர் என்கின்ற நிலையில் கூறிவருகிறார்.

அப்படியானால், இடைக்கால நிர்வாகம் பற்றி ஜனாதிபதி தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேசினாலே அரசாங்கத்தில் இருந்து விலகி விடுவோம் என தேச இத்தைசி சார்பில் ஜே.வி.பியின் பிரசார செயலர் விமல் வீரவன்ச எச்சரித்திருக்கிறார்.

எனவே இந்த நிலைப்பாட்டையா? தாமும் எடுப்பார் என்பதை அர்ஜுன ரணதுங்க இதுவரை வெளிப்படுத்தவில்லை.

### ஐக்கிய தேசிய கட்சியின் நிலைப்பாடு

பொறுப்புள்ள எதிர்கட்சி என்ற வகையில் தாம் ஜனாதிபதியின் உண்மையான சமாதான முயற்சிகளுக்கு தாம் ஆதரவு வழங்கப் போவதாக ஐக்கிய தேசிய கட்சி



அறிவித்துள்ளது. இது இலங்கையின் வரலாற்றில் முக்கிய நகர்வு என்றே சொல்லவேண்டும் எனினும் அது அரசியல் காய்நகர்த்தலா? அல்லது உண்மை வெளிப்பாடா? என்பதில் ஜனாதிபதியின் தரப்பு சந்தேகம் வெளியிட்டுள்ளது.

அதேநேரம், ஜனாதிபதி தனிப்பட்ட ரீதியில் ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கையை பரிசீலித்து விரைவில் எதிர்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பேச்சுவார்த்தை நடத்த அழைப்பார் என ஐக்கிய தேசிய கட்சியின் உயர்பீடம் நம்பிக்கை கொண்டிருக்கிறது.

தற்போதைய நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கோரிக்கையை ஏற்று அதன்படி நடக்காவிடடால் எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு மட்டுமல்ல தமக்கும் இலங்கையில் ஆட்சியை கொண்டு செல்ல முடியாது என்ற அச்சமே ஐக்கிய தேசிய கட்சியின் முடிவுக்கு காரணம் என்றும் கூறப்படுகிறது. எது எப்படியிருப்பினும்

அடுத்த கட்ட அரசாங்கத்தின் நகர்வைப் பொறுத்தே நாட்டின் நிலைமையை அனுமானிக்க முடியும்.

□□□□

## ஏன் இன்னும் தாமதம்...?

யாழ்.அஞ்சல் அலுவலகம் கோட்டையிலிருந்து இராணுவத்தால் வீசப்பட்ட குண்டுகளால் அழிவடைந்தமையும், மக்கள் அந்த அழகிய கட்டடத்தின் அழிபாடுகளைப் பார்த்து, மனம் நொந்தமையும் இரு தசாப்த கால வரலாறாயிற்று. சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின்னர் அவசர அவசரமாக நூலகம். வீரசிங்க மண்டபம், அஞ்சல் அலுவலகம் என்பன புனரமைக்கப்பட்டு, இன்று பூரத்தியடைந்த நிலையில் உள்ளன. இவற்றைக் கண்டதும் மக்கள் மனங்களில் பழையகட்டடங்களின் உருவங்கள் மனதில் தோன்றுகின்றன.

தற்போது கட்டப்பட்டு முற்றுப்பெற்ற நிலையிலுள்ள யாழ்ப்பாண அஞ்சல் அலுவலகம் அஞ்சலக வளாகம் என அழைக்கப்படும். அளவுக்கு அதனுள் அஞ்சல் அலுவலகம் பிராந்திய கணக்காளர் அலுவலகம், பிரதிஅஞ்சல் அதிபர் நாயகத்தின் அலுவகம் பிராந்திய நிர்வாக உத்தியோகத்தர் அலுவலகம் என பல பிரிவுகளை உள்ளடக்கிய, ஒருங்கிணைந்த வளாகமாக அமைக்கப்பட்டுள்ளது. ஏனைய இரு கட்டடங்களும் மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளன. ஆனால், நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ள தபாலகக் கட்டடம் மட்டும் அழகாகநல்லதோர் இருப்பிடததில் கட்டப்பட்டுள்ள போதிலும் இன்று வரை திறந்து விடப்படவில்லை.

2003ஆம் ஆண்டு ஒக்ரோபரில் இந்தக் கட்டடத்தின் வேலைகள் யாவும் முடிவடைந்த போதிலும், இன்று வரை அது திறப்பு விழா நடைபெறாது பாழடையும் நிலை ஏற்பட்டுள்ளது. அன்று இன்று என செய்திகள் அடிபட்டதை யாவரும் அறிவோம். என்ன நடநதது. இது பற்றி பல சாக்குப் போக்குகள் கூறபபடுகின்றன. உண்மை நிலை என்ன?

இந்த கட்டடம் கட்டப்பட்டும் திறக்கப்படாமையினால் அஞ்சல் துறையினர் மாதம் ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபாவை வாடகையாக வீணாகச் செலவிடும் நிலையில் தற்போது இயங்கி வருகின்றனர். புதிய கட்டடத்தை மேற்பார்வை செய்ய மேலும், ஒரு லட்சம் ரூபா செலவிடப்படுவதாக ஒரு கதை அடிபடுகின்றது. இந்த வீண் செலவுகள் இடம் பெறுகின்ற போதே, அஞ்சல் அதிகாரிகள் பேசமாட்டாதவர்களாக இருப்பதற்கான காரணம் என்ன?

கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, மக்கள் பாவனைக்கு விடாது விடின் அதன பயன்பாடு மக்களுக்கு இல்லாமல் போய்விடும். இவ்வாறான முடிவுகள் தவிர்க்கப்பட்டு இந்த அஞ்சல் அலுவலகத்தை திறப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் ஆவண செய்ய முன்வருவார்களா? இதுவே இன்று யாழ்.மக்கள் மனங்களில் உள்ள ஏக்கமாகும்.

- பெண்கள் அபிவிருத்தி மன்றம்

# பரகுவே நாட்டின் கடைத்தொகுதியில் தீ விபத்து காரணமாக 300 பேர் பலி!



பரகுவே நாட்டின் தலைநகரிலுள்ள கடைத்தொகுதியில் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக சுமார் முந்நூறு பேர் வரையிலான மக்கள் உயிரிழந்ததுடன், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் எரிகாயங்களுக்குள்ளாகினர்.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்குமென அஞ்சப்படுகிறது. சம்பவம் நடைபெற்ற கடைத தொகுதிக்குத் தீயணைப்புப்படையினர் வரவழைக்கப்பட்டு, கடைத்தொகுதியினுள் அகப்பட்டு உயிரிழந்தவர்களின் சடலங்களை அப்புறப்படுத்தி வருகின்றனர்.

கடந்த ஞாயிறு இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் காஸ் வெடிப்பினால் எற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. வாரக்கடைசியான ஞாயிறு இரவு பெருமளவு மக்கள் பொருட்களைக் கடைகளில் கொள்வனவு செய்ய வந்த வேளையிலேயே இந்தக் காஸ்வெடிப்பு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப் போதியளவு அம்புலன்ஸ் வசதிகள் இல்லாத காரணத்தால் பொலிஸார் தமது வாகனங்களில் காயமடைந்தவர்களைக் கொண்டுசென்றனர்.

காயமடைந்தவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குமாறு பொதுமக்களை பரகுவே உள்ளூர் தொலைக்காட்சி கேட்டுள்ளது. அயல் நாடான ஆர்ஜன்ரீனா, மருத்துவ மற்றும் அவசரகாலப் பணியாளர்களை அனுப்பி வைத்துள்ளது.

கடையொன்றுள் நின்றபெருமளவானோர் தீப்பிடித்த பின்னர் கடைகளின் யன்னல் ஊடாக பாய்ந்துள்ளனர். இதற்குக் கடையின் முன்வாசற்கதவு பூட்டியிருந்ததே காரணமாகும். இந்த வாசற்கதவு பூட்டப்பட்டதற்குப் பொருட கொள்வனவு செய்யவரும் மக்கள் பணத்தைச் செலுத்தாமல் செல்வதைத் தடுப்பதற்கே எனவும் தெரிவிக்கப் படுகிறது. இந்த வாசற்கதவு பூட்டப்பட்டது தொடர்பாக கடை உரிமையாளர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

பரகுவே ஜனாதிபதி நிகானோர் டியூறேற் சம்பவ இடத்திற்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டதுடன், இது மிகப்பெரிய வேதனையான சம்பவமெனவும் தெரிவித்தார். இந்த அழிவுபோல, தான் வேறெங்கும் பார்த்ததில்லையென பரகுவே நாட்டின் சுகாதார அமைச்சர் யூலியோ செசர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# கடத்தப்பட்ட துருக்கிச் சாரதி சுட்டுக்கொல்லப்பட்டார்!

ஈராக்கியத் தீவிரவாதிகளால் கடந்த சனிக்கிழமை கடத்திச் செல்லப்பட்ட துருக்கிய லொறிச் சாரதி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை திவிரவாதிகளால கடத்திச்செல்லப்பட்ட துருக்கியக் கம்பனியின் லொறிச் சாரதியான முறாட் யூஸ் என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இவரைக் கடத்திச் சென்ற தீவிரவாதிகள் இவரை விடுதலை செய்வதாயின் ஈராக்கிலுள்ள துருக்கியக் கம்பனிகளும், துருக்கிய பணியாளர்களும் ஈராக்கினை விட்டு வெளியேறவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

ஆனால், நேற்றைய தினம் குறிப்பிட்ட லொறிச்சாரதியை தீவிரவாதிகள சுட்டுக்கொலை செய்ததை அல் - ஜசீரா தொலைக்காட்சி காண்பித்தது.

முகமூடி அணிந்த தீவிரவாதிக



ளுக்கு முன்னே கண்கள் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்ட துருக்கிய லொறிச்சாரதி - ஈராக்கிற்குள் வேலைக்காக வருகின்ற துருக்கியர்களிற்கு நான் ஒரு அறிவுரையைக் கூறவிரும்புகிறேன். நீங்கள் அமெரிக்கப் படைகளுக்கு உதவுவதற்கு ஈராக்கினுள் ஆயுதங்களுடன் வரவேண்டும் என்பதில்லை.

ஈராக்கிற்குள் வந்தாலே அமெரிக்காவிற்கு உதவியதாகவே கருதபபடுமென்றும், துருக்கியக் கம்பனிகள் ஈராக்கிலிருந்து வெளியேற வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இவ்வாறு குறிப்பிட்ட துருக்கிய லொறிச்சாரதி கூறியதன் பின்னர்- தீவிரவாதிகளின் தலைவர், லொறிச் சாரதியின் தலையில் மூன்று முறை கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார்.

உலக நோக்கு

# ஈராக்கிலுள்ள 6 தேவாலயங்கள் மீது ஒரே நேரத்தில் கார்க்குண்டுத் தாக்குதல்

(பாக்தாத்)

ஈராக்கில் 6 கிறிஸ்தவத் தேவாலயங்களில் ஒரே நேரத்தில் கார்க்குண்டுத் தாக்குதல் நடந்தது. இதில் 15 பேர் பலியானார்கள். ஏராளமானவர்கள் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை பிரார்த்தனை நடந்தபோது ஒரே நேரத்தில் பாக்தாத் நகரில் 4 கிறிஸ்தவ தேவாலயங்களிலும், மொசூல் நகரில் 2 கிறிஸ்தவ தேவாலயங்களிலும் கார்க்குண்டுத் தாக்குதல் நடந்தது.

முதற் குண்டுத் தாக்குதல் கரடா என்ற இடத்தில் உள்ள ஆர்மீனியன் தேவாலயம் மீது நடந்தது. இந்தத் தாக்குதல் நடந்த சில நிமிடங்களில் கத்தோலிக்க சிரியன் தேவாலயம் மீது 2 ஆவது தாக்குதல் நடந்தது.

2 தாக்குதல்களையும் தற்கொலைப் படையினர் திட்டமிட்டு நடத்தியிருந்தனர். இந்தத் தாக்குதல்கள் பற்றித் தகவல் கிடைத்ததும் பொலிஸாரும், தீயணைப்புப் படையினரும் சம்பவ இடங்களுக்கு விரைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

கைகள் துண்டான ஒருவர் உட்பட 15 பேரைப் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்த்தனர். அவர்களில் 2 பேர் பரிதாபகரமாக இறந்தனர்.

மொசூல் என்ற நகரத்தில் உள்ள ஒரு கிறிஸ்தவ தேவாலயத்தின் மீதும் கார்க்குண்டுத் தாக்குதல் நடைபெற்றது. இதில் ஒருவர் பலியானார். பலர் படுகாயமடைந்தனர்.

இதேபோல மொசூல் நகரில் மேலும் ஒரு கிறிஸ்தவ தேவாலயம் மீதும் கார்க்குண்டுத் தாக்குதல் நடந்தது. இதில் பலியானவர்களின் எண்ணிக்கை தெரியவில்லை. ஆனால், பலர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பாக்தாத் நகரில் கால்டீன் தேவாலயத்தில் நேற்றுமுன்தினம் மாலை பிரார்த்தனை முடிந்து பக்தர்கள்



வெளியே வந்துகொண்டிருந்தனர். அப்போது கார்கள் நிறுத்தப்பட்ட அந்தப் பகுதிக்குள் திடீரென ஒரு கார் மின்னல் வேகத்தில் பாய்ந்து வெடித்தது. இதில் 12 பேர் உடல்சிதறி உயிரிழந்தனர். ஏராளமானவர்கள் காயமடைந்தனர். இறந்தவர்களது உடற்பாகங்கள் ஆங்காங்கே சிதறிக்கிடந்தன.

தொடர்ந்து ஆறாவதாகவும் ஒரு கிறிஸ்தவ தேவாலயத்தில் கார்க்குண்டுத் தாக்குதல் நடைபெற்றது. ஆனால், பலியானவர்கள், காயமடைந்தவர்கள் பற்றிய விபரம் தெரியவில்லை.

ஈராக் நாட்டில் 8 லட்சம் கிறிஸ்தவர்கள் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் பாக்தாத் நகரில் வசிக்கிறார்கள். அவர்களில் பலர் மது விற்பனையில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் மீதுதான் கடந்த சில வாரங்களாக இப்படிப்பட்ட தாக்குதல்களை ஈராக்கியர்கள் நடத்தி வருகிறார்கள்.

# பாகிஸ்தானில் துப்பாக்கிச்சூடு ஐந்து ராணுவ வீரர்கள் உயிரிழப்பு

(குவெட்டா)

பாகிஸ்தானில் அடையாளம் தெரியாத நபர்கள் சிலர் சுட்டதில் விடுமுறையில் சென்றுகொண்டிருந்த ராணுவ வீரர்கள் ஐந்து பேர் உட்பட ஆறு பேர் உயிரிழந்தனர். மேலும் இரண்டுபேர் படுகாயமடைந்தனர்.


பாகிஸ்தானில் உள்ள மிகப் பெரிய மாகாணம் பலுசிஸ்தான். இதன் தலைநகரான குவெட்டாவிலிருந்து 200 கி.மீ.தொலைவில் இருக்கும் குஸ்தார் நகர் அருகே இந்தச் சம்பவம் நடந்துள்ளது. பாகிஸ்தானின் தென்மேற்குப் பகுதியில் இருக்கும் மிகச்சிறிய நகரமான இங்கு, இராணுவத்தினர் சென்றுகொண்டிருந்த வாகனத்தின்மீது, மர்ம நபர்கள் சிலர் மறைந்திருந்து துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

இது குறித்து இஸ்லாமாபாத்தில் உள்ள இராணுவச் செய்தித் தொடர்பாளர் மேஜர் ஜெனரல் சவுகத் சுல்தான் கூறுகையில் -

இந்தத் தாக்குதலில் ஐந்து ராணுவ வீரர்கள் உட்பட ஆறுபேர் உயிரிழந்தனர். ஒரு ராணுவ வீரர் உட்பட இரண்டு பேர் காயமடைந்துள்ளனர். இராணுவ வீரர்கள் அனைவரும் சாதாரண உடையில் விடுமுறைக்காக அவரவர் வீடுகளுக்குச் சென்றுகொண்டிருந்தபோது இந்தத் துப்பாக்கிச்சூடு நடந்துள்ளது.

இந்தச் சம்பவத்திற்கு இதுவரை எந்த இயக்கமும் பொறுப்பேற்கவில்லை. இது முற்றிலும் தீவிரவாதச் செயல். இதுகுறித்த விசாரணையை நாங்கள் ஆரம்பித்துள்ளோம் என்றார்.

# ஓடமும் ஒருநாள் வீதியில் ஓடும்



பங்களாதேஷில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கையடுத்து வீதிகளில் போக்குவரத்துச்செய்யும் படகுகள்

# வடகொரியாவில் கடும் மழை, வெள்ளம் பெருமளவில் மக்கள் இடம்பெயர்வு!

வடகொரியாவில் இடம்பெற்ற கடும்மழை மற்றும் வெள்ளப் பெருக்குக் காரணமாக பல்லாயிரக் கணக்கான மக்கள் வீடுகளிலிருந்து இடம்பெயர்ந்துள்ளதுடன், பல ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வடகொரியாவிலிருந்து வரும் செய்திகள் - ஒரு இலட்சம் ஹெக்ரெயர் வயல் நிலங்கள் வழமைக்கு மாறான மழைகாரணமாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகத் தெரிவித்தன.

இந்த வழமைக்கு மாறான மழை காரணமாக வயல் நிலங்களில் செய்கை பண்ணப்பட்ட பயிர்களை அறுவடை செய்வது இயலாதெனவும், சுமார் முப்பதுவீதமான வயல் நிலங்கள் கைவிடப்படவேண்டிவரலாமென எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பல வீதிகள், ரயில்வேப பாதைகள் என்பன வெள்ளத் தால் சேதமடைதுள்ளதுடன், தொலைத் தொடர்பு வசதிகளும் செயலிழந்துள்ளன. இதனால் பாதிப்புத் தொடர்பான மேலதிக விபரங்களைப் பெறுவதில் சிக்கல் நிலைதோன்றியுள்ளது.

சுமார் ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வெள்ளப்பெருக்கினால் பாதிப்படைந்து சர்வதேச உதவிகளை எதிர்பார்த்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சீர்திருத்தம் தொடர்பாக ஆராயவிருந்த பலஸ்தீன அதிகாரசபையின் கூட்டம் ஆயுததாரிகளால் இடைநிறுத்தப்பட்டது



(டெல்அவில்)

பலஸ்தீன அதிகாரசபையில் சீர்திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பாக ஆராய்வதற்காகக் கூடிய யாசிர் அரபாத்தின் பாத் கட்சியின் கூட்டம் பலஸ்தீன துப்பாக்கிதாரிகளின் துப்பாக்கிச் சூட்டினால் இடைநிறுத்தப்பட்டது.

பலஸ்தீன அதிகாரசபையில் சீர்திருத்தம் செய்வது தொடர்பாகப் பலஸ்தீன போராளிகளுக்கு ஏற்கனவே யாசிர் அரபாத்தின் பாத் கட்சி அழைப்பு விடுத்திருந்தது.

ஆனால், பலஸ்தீனப் போராளிகள் குறிப்பிட்ட கூட்டத்தினை வெளிநடப்புச் செய்ததுடன், கூட்டம் ஆரம்பமான சமயம் வானைநோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பலஸ்தீன நாடாளுமன்றத்தினதும், பாத் கட்சியினதும், அரசியல் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்ட இந்தக்கூட்டம் இடைநிறுத்தப்பட்டது.

யாசிர் அரபாத்தின் நடவடிக்கையில் அதிருப்தி கொண்ட அவரது விசுவாசிகளே இந்தக் கூட்டத்தினைக் குழப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

பலஸ்தீன அதிகார சபையின் சீர்திருத்தம் தொடர்பான இந்தக் கூட்டம் - வெளியே லஞ்ச ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் ஜனநாயக அதிகாரத்தினை வழங்குதல் என்பன போன்று தென்பட்டாலும் அதிகாரத்தினைக் கைப்பற்றுவதையே நோக்காகக்கொண்டது என்றும் அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தமிழர் தாயகத்தை சிதைக்க ஹெல உறுமய முயற்சிக்கிறது

## மட்டு - அம்பாறை அரசியற்துறை குற்றச்சாட்டு

பிரதேச வாதத்தைத் தூண்டிவிட்டு தமிழர் தாயகத்தை சின்னாபின்னப்படுத்த, பௌத்த இனவெறி கொண்ட ஜாதிகஹெல உறுமய முயன்றுவருவதாக மட்டக்களப்பு - அம்பாறை அரசியற்துறை குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியற்துறையினர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

இந்த அறிக்கையில் -

தமிழர் மண்ணில் சிங்கள, பௌத்த கொடியை ஏற்றும் முயற்சிகளின் ஒரு கட்டமாக இவ்விரு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்குத் தமிழர் மத்தியில் துரோகிகள் பணத்துக்காக அடிமைப்பட்டு உதவிபுரிந்துவருகின்றனர்.

முன்னரும் இவ்வாறான முனைப்புகள் அத்துமீறிய குடியேற்றம் மற்றும் இராணுவ ஆதிக்கம் என்ற அடிப்படையில் இடம்பெற்றபோது அதில் அம்பாறை -மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்கள் வெற்றியுடன் முறியடித்த வரலாற்றை இனவாதிகள் மறந்துவிட்டார்கள்.

தற்போது இனவாதிகள் மீண்டும் முனைப்பு ஒன்றில் ஈடுபட்டிருக்கிறார்கள். பல ஆண்டுகளாகப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பல்லாயிரக்கணக்கான மக்கள் கைது செய்யப்பட்டு சிறையில் வாடியதை எவராலும் மறக்கமுடியாது.

இந்த நிலையில் மீண்டும் இனவாதிகளின் முயற்சிகளை முறியடிக்க மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் ஓரணியில் திரளவேண்டும் என்று, மடடக்களப்பு- அம்பாறை மாவட்ட அரசியற்துறை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளின் பிஸ்டல்...

அழைத்துச் சென்றுள்ளார். இந்தச் சந்திப்புகள் முடிவடைந்ததும் குறிப்பிட்ட நபரை மீண்டும் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் இறக்கிவிட்ட பின்னர் தனக்குத் தொலைபேசி அழைப்பொன்று வருவதை அவதானித்த மோகன் ஓட்டோவை நிறுத்துமாறு சாரதியிடம் கூறிவிட்டு அதிலிருந்து இறங்கி தொலைபேசி அழைப்பிற்குப் பதிலளித்துக் கொண்டிருக்கும்போதே அவர்மீது சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக, மோகன் பயணம்செய்த முச்சக்கர வண்டிச்சாரதி விசாரணைகளின்போது தெரிவித்தார்.

மோகன் சுட்டுக்கொல்லப்படுவதற்கு முன்னர் அவரால் இறக்கிவிடப்பட்ட குறிப்பிட்ட நபர் திடீரெனத் தலைமறைவாகியுள்ளதன் காரணமாக இந்தக் கொலையுடன் இவரே தொடர்புபட்டிருப்பதாகத் தாம் உறுதியாக நம்புவதாகப் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

இதேவேளை - மோகனின் மனைவியால் வழங்கப்பட்ட தகவல்களின் படி, குறிப்பிட்ட சந்தேக நபர் வெளிநாட்டிலுள்ள மோகனின் சகோதரனுடன் பழக்கமுள்ளவரெனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டதாகவும், மோகனின் செல்வாக்கைப் பயன்படுத்தி மதுபானக் கடைக்கான உரிமப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவே மோகனைச் சந்திக்கத் தீர்மானித்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

பம்பலப்பிட்டியில் புளொட் மோகன் கடந்த சனிக்கிழமை கொலை செய்யப்பட்டமை தொடர்பாக, தேடப்பட்டு வரும் சந்தேகத்துக்குரியவர் தங்கியிருந்ததாகக் கூறப்படும் விடுதியின் உரிமையாளரை பொலிஸார் விசாரணை செய்யவுள்ளனர்.

சந்தேகத்துக்குரியவர் குறிப்பிட்ட உணவு விடுதியிலேயே தங்கியிருந்ததாகவும், அந்த உணவு விடுதியை சோதனையிட்டபோது, அவர் தொடர்பான பல்வேறு தகவல்கள் கிடைத்துள்ளதாகவும், கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சரத்லூகொட தெரிவித்தார்.

இந்தத் தகவல்களின் அடிப்படையில் மேலதிக விசாரணைகள் இடம்பெறுவுள்ளது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாகஇதுவரை 30 க்கும் மேற்பட்டோர் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பிடப்பட்ட விடுதியில் கடமையாற்றும் ஊழியர்கள் பலரின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பொலிஸாரால் தேடப்படுபவர் கடந்த 30 ஆம் திகதி முதல் குறிப்பிட்ட விடுதியில் தங்கியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

பம்பலப்பிட்டி ஆர்.ஏ.டிமெல் மாவத்தையில் வஜிர வீதிக்கு அருகில் புளொட் மோகன் என்ற கந்தையா யோகராசா கடந்த 31 ஆம் திகதி கொலை செய்யப்பட்டார். இந்தக் கொலையை மூன்று அல்லது அதற்கு மேற்பட் டோர் மேற்கொண்டிருக்கலாம் என்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சரத் லூகொட மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இராணுவத் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில், புளொட் மோகன் இராணுவப் புலனாய்வுத்துறையில், பணியாற்றவில்லையென்றும் தகவல் வழங்கும் நபராகவே வெளியிலிருந்து செயற்பட்டதாகவும் குறிப் பிடப்பட்டுள்ளது.

## திங்களன்று...

இடத்திற்குச் செல்வதற்கு அனுமதிகுமாறு பிரதேச செயலர் ஊடாக இராணுவ அதிகாரிகளுக்கு மகஜர் கையளிக்கப்பட்டதுடன், யூலை 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது வீடுகளை ஒப்படைக்குமாறும் அவ்வாறு-

அனுமதி மறுக்கப்பட்டால் பிரதேச செயலகத்துக்கு முன்பாக மறியல் போராட்டம் நடத்தப்போவதாக எச்சரிக்கையும் விடுத்திருந்தனர்.

எனினும், இதுவரை எந்தப் பதிலும் வழங்கப்படாததையடுத்து எதிர்வரும் 9 ஆம் திகதி பிரதேச செயலகம் முன்பாக மறியற்போராட்டத்தில் ஈடுபடப்போவதாகத் தெரிவித்தனர்.

உசன் பகுதிக்குச் செல்லும் வீதியை திறந்து சொந்த வீடுகளில் மீளக்குடியமர நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஓமந்தையில் இளம் பெண் கைது

(வவுனியா)

வவுனியா நோக்கிச் சென்ற இளம்பெண் ஒருவரைப் படையினர் சந்தேகத்தின் பேரில் ஓமந்தை சோதனைச்சாவடியில் வைத்து கைது செய்ததாகத் தெரியவருகிறது.

நேற்று முன்தினம் பிற்பகல் 4.20 மணியளவில் மார்க்கண்டு கீதா (பிள்ளையார் கோவிலடி நவாலி) என்ற 30 வயதுடைய பெண்ணே படையினரால் கைதுசெய்யப்பட்டவராவார்.

அடையாளஅட்டை போலியானது எனத் தெரிவித்தே, படையினர் இவரைக்கைது செய்ததுடன் மேலதிக விசாரணைக்காக ஓமந்தைப் பொலிஸாரிடம் கையளித்தனர்.

## 63 பொதுமக்களின்...

டித்துறை மருதடி சந்தியிலிருந்து ஊர்வலமாக தீருவில் சதுக்கத்துக்குச் சென்றது.

அங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நினைவுக்கல்லின் முன் இறந்தவர்களுக்கு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை வடமராட்சிக்கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா ஏற்றிவைக்க, தேசியக்கொடியை யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி ஏற்றிவைத்தார்.

வல்வை விளையாட்டுக் கழகத்தின் கொடியை கழகத்தின் தலைவர் மு.தங்கவேல் ஏற்றினார். நினைவுத்தூபியை கடற் புலிகளின் மகளிர் பிரிவுத்தளபதி மதிவதனி திரைநீக்கம் செய்துவைத்தார்.

ஈகைச்சுடரை கி.கருணானந்தராசா, இ.கனகசபை ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

கடற்புலிகளின் மகளிர் அணிப் பொறுப்பாளர் பூரணி நினைவுக்கல்லுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

இதனையடுத்து, வல்வை விளையாட்டுக்கழகத் தலைவர் த.தங்கவேல் தலைமையில் அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, கடற்புலிகளின் மகளிர் பிரிவுத்தளபதி மதிவதனி, கடற்புலிகளின் மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் பூரணி ஆகியோரும் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

இறந்தவர்களின் நினைவாக வல்வை விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (17)

## காசாளர் கொலையைக் கண்டித்து

# யாழ்.வங்கி ஊழியர்கள் நாளை அடையாள வேலை நிறுத்தம்!

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மக்கள் வங்கியின் காசாளர் பஞ்சலிங்கம் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்து நாளை ஒரு மணிநேரம் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதெனவும் பின்னர் கறுப்புப்பட்டி அணிந்து கடமையில் ஈடுபடவும் வங்கி ஊழியர் சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

கடந்த 23 ஆம் திகதிமானிப்பாய் மக்கள் வங்கியில் பணியை முடித்து விட்டு வீடுதிரும்பியவேளை காணமல், போயிருந்த காசாளர் பஞ்சலிங்கம் இரு தினங்களின் பின்னர் அராலி கொட்டைக்காட்டுப்பகுதியில் கொலைசெய்யப்பட்டு சடலமாக மீட்கப்பட்டார்.

இவரது படுகெலையைக் கண்டித்து நேற்று யாழ்.சன்மார்க்க வித்தியாலயத்தில் நடைபெற்ற அஞ்சலிக்கூட்டத்தில் யாழ்மாவட்டத்திலுள்ள வங்கியாளர்கள் ஒன்றிணைந்து நாளை அடையாள வேலைநிறுத்தம் மற்றும் கறுப்புப்பட்டிப் போராட்டத்தை நடத்துவதாக முடிவெடுத்தனர்.

நாளை காலை வங்கிகளின் கடமைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் அனைத்து ஊழியர்களும் கறுப்புப் பட்டிகளை அணிந்து பணியில் ஈடுபடுவது என்றும்,

காலை 10 மணிமுதல் ஒரு மணிநேரம் கடமைகளை நிறுத்தி வங்கிக்கு வெளியே நின்று சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு வெளிநடப்பில் ஈடுபடுவதென தீர்மானிக்கப்பட்டது.

காசாளரை படுகொலைசெய்த நபர்களை, சட்டத்தின் முன் நிறுத்துதல், வங்கி ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன் வங்கி ஊழியர்கள் பஞ்சலிங்கத்தின் படுகொலையைக் கண்டித்து வங்கியின் முன்பாக சுலோகங்களைத் தாங்கி எதிர்ப்பை வெளிப்படுத்தவுள்ளனர்.

இநதப் போராட்டத்தில் அனைதது வங்கி ஊழியர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ்மாவட்ட இலங்கை வங்கி ஊழியர் சங்கம், யாழ.மாவட்ட வங்கியாளர் சங்கம் யாழ்மாவட்ட தேசிய ஊழியர் சங்கம் ஆகியன அழைப்பு விடுத்துள்ளன.

இதேவேளை, மானிப்பாய் மக்கள் வங்கிக் கிளையின் காசாளர் பஞ்சலிங்கம் படுகொலை செய்யப்பட்டதனை யாழ்.மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம் வன்மையாகக் கண்டித்துள்ளதுடன் -

நாளை நடாத்தும் கறுப்புப்பட்டிப் போராட்டத்தினை ஆதரித்து சகல வர்த்தகப் பெருமக்களும் கறுப்புப் பட்டி அணிந்து தமது கடமைகளில் ஈடுபடுமாறு, யாழ்.மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## அமைச்சுப் பொறுப்புகள்...

வின் சில்வா தலைமையிலான குழுவும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில், அதன் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட குழுவும் கலந்துகொண்டன.

ஜே.வி.பியின் விவசாய அமைச்சின் கீழ்வரும் சில விடயங்களைக் கலந்துரையாடாமலே சிறிலங்கா சுதந்திரக் கட்சி வசமுள்ள ஆறுப் படுகை அமைச்சுக்கு ஜனாதிபதியால் மாற்றப்பட்டிருந்தமை தொடர்பாக, ஜே.வி.பி உடனடியாகவே ஜனாதிபதியை எச்சரிக்கும் வகையிலான கடுமையான அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - இந்தச் சந்திப்பில் இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக ஆராயப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்ணியின் நிறைவேற்றுக் கூட்டத்தில் இடைக்கால நிர்வாகசபை தொடர்பிலான தனது இறுதி நிலைப்பாட்டினை ஜே.வி.பி வெளியிடுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

கட்சித்தலைவர்கள் மட்டத்தில் மிகவும் சிக்கலான விடயங்கள் இடம்பெறக்கூடாதென்றும், இத்தகைய விடயங்கள் முன்னணியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்திலேயே இடம்பெற வேண்டுமெனவும் ஜே.வி.பி வலியுறுத்தி வருவதால் நேற்றைய சந்திப்பில் பேச்சுவார்த்தையினை இடைக்கால நிர்வாகசபை யோசனையின் அடிப்படையில் கொண்டு செல்வது தொடர்பான முரண்பாடு அல்லது சாத்தியமான முடிவுகள் குறித்த முடிவுகள் எதுவும் எடுக்கவில்லை.

நேற்று மாலை 5.30 மணியளவில் ஜனாதிபதி இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (01)

# கிளிநொச்சி பட்டதாரிகளுக்கு அடுத்த வாரம் நியமனமாம்!

## அரச அதிபருக்கு திறைசேரி அதிகாரி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் இந்த வாரம் பரிசீலனை செய்யப்படவுள்ளதாக, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

முதலாவது கட்டமாக வெளியிட்ட பட்டதாரிகள் நியமனம் குறித்த பட்டியலில் கிளிநொச்சி மாவட்ட பட்டதாரிகள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டமை தொடர்பாக, தான் புனர்வாழ்வு அமைச்சுடனும், திறைசேரியுடனும் தொடர்புகொண்டபோதே தமக்கு இவ்வாறு தெரிவிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தவாரம் பரீசீலிக்கப்படும் விணணப்பங்களுக்கு அடுத்த வாரமளவில் நியமனக்கடிதம் வழங்கப்படும் எனவும் திறைசேரி அதிகாரிகள் தமக்கு தெரிவித்ததாக கிளிநொச்சி அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

## சமாதான...

கம் நடந்துகொண்ட விதம், பம்பலப்பிட்டி துப்பாக்கிச் சூட்டு விவகாரம் என்பன அரசு மீது - புலிகள் கொண்டுள்ள சந்தேகத்தை வெளிப்படுத்தியுள்ளன.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பாதுகாப்புக்கான அச்சநிலையைப் போக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சமாதானம் குறித்து ஜனாதிபதியின் உண்மையான வெளிப்பாடு நடைமுறைப்படுத்தப்படுமானால் அதற்கு எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள முடியும்.

விவசாய அமைச்சராக இருந்தபோது ஊழல்கள் இடம்பெற்றதாகக் கூறிய ஜே.வி.பியின் அமைச்சரான அநுரகுமார திஸநாயக்க தற்சமயம் சுமார் 15 வாகனங்களைப் பயன்படுத்தி வருகிறார்.

அத்துடன், அவற்றில் சிலவற்றை அவர் கட்சியின் பிரசாரத்துக்காகப் பயன்படுத்துவதாகவும் எஸ்.பி.திஸநாயக்க குற்றம் சுமத்தினார். (01)

## அரசாங்கம்....

அரசாங்க சமாதானச் செயலகத்தின் செயலாளர் ஜயந்த தனபாலவாய் மூலமாக இந்தத் தகவலைப் பரிமாறியபோது, இதனை ஏற்க மறுத்துள்ள விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாகசபை தவிர்ந்த வேறெதனையும் தாம் ஏற்கப்போவதில்லை எனவும், உறுதிபடக் கூறியதாகவும் ஆங்கிலப் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

## கருணாவை...

சர்வதேச சட்டம் ஒன்றின் கீழ் கருணாவை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க வேண்டுமென்பதில்லை. இவரை ஒப்படைப்பது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையோ அல்லது உடன்படிக்கையோ அரசாங்கத்தால் செய்யப்படவில்லை.

அத்துடன், அரசாங்கம் விடுதலைப் புலிகளுடனான சந்திப்பில் அரைவாசித் தூரத்தையே கடந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## யாழ்.மாவட்ட பட்டதாரிகளுக்கான அவசர வேண்டுகோள்

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பட்டதாரிகளும் *(பத்திரிகையில் பெயர் வந்தவர்கள் உட்பட)* தங்கள் பட்டம் செல்லுபடியாகும் காலத்தினை உறுதிப்படுத்த வேண்டியுள்ளதால் **(Statement)** 03.08.2004 காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை மட்டும் தத்தம் பிரதேச செயலகத்துக்குச் சென்று அங்கு நியமிக்கப்பட்டுள்ள பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகளிடம் பதிவுகளை மேற்கொள்ளவும். தவிர்க்கமுடியாத காரணத்தால் விண்ணப்பதாரி வரமுடியாதுவிடின் அவரது உறவினர்கள் வருகை தந்து பட்டத்திகதிகளை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(799) **செயலாளர்.**

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

LECTURES BY

**MR.M.A. HARI**

**புதிய பிரிவு ஆரம்பம்**

03.08.2004 செவ்வாய் மாலை 5.00 p.m.

Tuesday / Thursday } 5.00 p.m-6.00 p.m

**HARY'S INSTITUTE**

இல. 564, கஸ்தூரியார் வீதி,
(யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.